## சிறுவன் மரணம்

தவனிதன் ஜெயகுமார் (வயது 4+) என்ற சிறுவன் மின்சார இணைப்பில் இருந்து மின்னழுத்தியை தொட்டபோது ஏற்பட்ட மின்னதிர்ச்சியால் சாவடைந்துள்ளார். வில்லூன்றி பகுதியில் வசிக்கும் இவரது தாய் முகாமைத் திணைக்கள அலுவலர் என்பது தெரியவந்துள்ளது. கருகிய நிலையில் சிறுவனின் உடலானது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளது.

சித்திரை மாதம் 28ம் திகதி

May 11, 2013

# மலைமுரசு®

அறைவு 01 இயம் 42

MALAIMURASU

உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும்

விலை – 20.00 Registered as a Newspaper in Sri Lanka பக்கங்கள் – 10 பிரதி சனி தோறும் திருமலையில் இருந்து வெளியாகும் வார இதழ்

# திருமலையில் சுமார் 800 ஏக்கர் காணி சுவீகரிப்பு?

முப்படைகளின் தேவைகளுக்காக திருகோணமலை மாவட்டத்தில் சுமார் 800 ஏக்கர் நிலப்பரப்பை சுவீகரிக்கும் நடவடிக்கைக்கான ஆரம்பக்கட்ட அனுமதியினை வழங்கும் கூட்டமொன்று திருமலை.. 7

## ஆசியக் கடற்படைக்கு திருமலையில் பயிற்சி

சிறப்புப் படகுப் படையணிக்கான போர்ப்பயிற்சி நெறியொன்று இலங்கைக் கடற்படையின் திருமலைக் கடற்படைத் தலைமையகத்தில் மே மாதம் 06ம் திகதி ஆரம்பமாகியுள்ளது. சீரற்ற போர் அரங்கில் எதிரியுடன் எவ்வாறு போரிடுவது என்பது பற்றிய சிறப்புப் பயிற்சி நெறியாக.. 7

## வெற்றியுடன் நிறைவுற்றது கனிய மணல் கூட்டுத்தாபன ஊழியர் போராட்டம்


கூட்டுத்தாபன ஊழியர்களில் சிலர் பணிநீக்கம் செய்யப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்து கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் புல்மோட்டைக் கனிய மணல் கூட்டுத்தாபன ஊழியர்கள் உண்ணாநிலைப் போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர். தொடர்ச்சியாக நான்கு நாட்கள் நடைபெற்ற இப் போராட்டத்திற்கு ஆதரவாக புல்மோட்டை மக்களும் களத்தில் குதித்திருந்தனர். 7

## உலக பத்திரிகைச் சுதந்திர தினம் மே – 03

பத்திரிக்கை சுதந்திர தினம் ஒவ்வொரு ஆண்டும் மே 3 ஆம் திகதி கொண்டாடப்படுகிறது. பத்திரிகை சுதந்திரத்தின் முக்கியத்துவத்தை உணர்த்தும் விதத்தில் இத் தினம் கொண்டாடப்படுகிறது.

இந்நிலையில் பத்திரிகை சுதந்திர அட்டவணை ஒன்றை "ரிபோர்டர்ஸ் வித்அவுட் பார்டர்ஸ்" என்ற அமைப்பு வெளியிட்டுள்ளது. 7

## 242 பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனம்



திருகோணமலையிலுள்ள கிழக்கு மாகாண கல்வி அமைச்சில் புதன்கிழமை நடைபெற்ற நிகழ்வொன்றின்போது ஆசிய நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளது.

மாகாணத்திலுள்ள பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்காகவே இந் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. 55 சிங்கள மொழி மூல ஆசிரியர்களும் 187 தமிழ் மொழி மூல ஆசிரியர்களும் மாவட்ட வேலைத்திட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த ஜனவரி மாதம் கிழக்கு மாகாண பொதுச் சேவைகள் ஆணைக்குழுவினால் நடாத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில்.. 7

## ரிஸானாவின் புதிய வீடு

சவூதி அரசினால் சிரச்சேதம் செய்யப்பட்ட ரிஸானாவிற்காக இராணுவத்தின்ரின் ஆட்பலத்துடன் கட்டப்பட்டுள்ள புதிய வீடு நிறைவுறும் தருவாய்க்கு வந்துள்ளது.

சிரச்சேதம் செய்யப்பட்ட ரிசானாவின் சகோதரனுக்கு சனாதிபதியின் பணிப்பின் படி வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தில் வேலையொன்று வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



## புதிய அதிபரைப் பதவி ஏற்க விடாத பழைய அதிபர்

### புல்மோட்டையில் சம்பவம்

புல்மோட்டை அரபாத் வித்தியாலய புதிய அதிபரை தமது கடமைகளைப் பொறுப்பேற்க முன்னைய அதிபர் அனுமதிக்கவில்லை.

இவ் விடயத்தை நிர்வாக முறைப்படி தீர்ப்பதற்கு கல்விப் பணிப்பாளர் மேற்கொண்ட முயற்சியும் கைகூடவில்லை.

இவ் இழுபறி தொடர்பாகத் தெரியவருவது யாதெனில், இப் பாடசாலைக்கு அதிபர் தரம் II - I ல்

## மே மாதத்தில் சம்பூரின் ஒப்பந்தம் கைச்சாத்தாகின்றது

இலங்கை இந்திய அரசுகளுக்கிடையே சம்பூரில் மின்னுற்பத்தி நிலையத்தினை உருவாக்கும் இறுதிக்கட்ட ஒப்பந்தம் கைச்சாத்திடப் படவுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஆரம்பம் முதலே இழுபறியில் இருந்துவரும் மின்னுற்பத்தி நிலைய உருவாக்கம் தொடர்பான ஒப்பந்தத்தை இம் மாத முடிவுக்குள் எவ்வாறாயினும் நிகழ்த்த வேண்டிய கட்டாயம் இலங்கை அரசிற்கு எழுந்துள்ளது. ஏனெனில் மின்சாரக் கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டவுடன் மக்களிடையே எழுந்துள்ள எதிர்ப்பலைகளை ஒன்றுகுவித்துப் போராட்டங்களை நடாத்துவதற்கு எதிர்க்கட்சிகள் தயாராகி வருவதால் அதனை தடுப்பதற்கான நடவடிக்கைகளில் ஒன்றாக சம்பூர் மின்னுற்பத்தி நிலைய ஒப்பந்தத்தை நிறைவேற்ற அரசு முயற்சிக்கின்றது. சம்பூர் அனல் மின்னுற்பத்தி நிலையம் 7

Veal Montessori

மூன்று மொழியிலும் கல்வி நடவடிக்கைகள்

2½ வயது முதல் அனுமதி

Celebrating Festivals:
Saraswathi Pooja
Vesak
Ramzan
Xmas

1st Term - Sportsmeet
2nd Term - Excursion
3rd Term - Concert

School:
Veal Montessori (International)
No. 27, Lavender Lane, Trincomalee
026 320 4840, 077 199 8499

Head Office:
Veal Business College - No. 159A Sea View Road, Trincomalee 777 555 738

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2

மலைமுரசு
159A, 2ம் மாடி, கடல் முக வீதி,
திருக்கோணமலை.
malaimurasu@hotmail.com
0754252042

## வணக்கம்

அறிவும்
ஆயுதமும் !!!

உலகப் புகழ்பெற்ற தத்துவ ஞானி சோக்ரட்டீசின் வார்த்தைகளுள் முக்கியமானது "உன்னையே நீ அறிவாய்" என்பது.... உன்னை நீ அறிதல் என்பது ஓர் ஆன்ம விசாரமே (ஆன்மாவின் விசாரிப்பு). தன்னைத் தான் அறிதல் என்பது வெற்றி பெற்ற மனிதர்களின் வெற்றிச் சூத்திரம்!

என்னை நான் அறியும் போது எனது பலத்தை நான் அறிந்து கொள்வேன்.... அதற்கும் மேலாக என் பலவீனத்தையும் நான் அறிந்து கொள்வேன்... தனது பலவீனத்தை எவன் சரியாக அறிந்து அதனைப் பலமாக்கிக் கொள்கின்றானோ அவனையே நாம் வெற்றிபெற்ற மனிதனாக வரலாற்றில் பதிகின்றோம்...

கண்ணதாசனின் பலவீனம் மது... ஆனால் அதனைத் தன் பலமாக அவர் மாற்றிக் கொண்டதால் தான் மது அருந்திய பின் அற்புதமான பாடல்வரிகளைப் புனைய முடிந்தது அவரால்...

தன்னை அறிதல் என்னும் வரிகளை வரைந்த சோக்ரடீஸ் எழுதிய "அறிவு ஆயுதம்" என்ற வரியும் காலத்தால் அழியாதிருக்கின்றது. இந்த வரிக்காகத் தான், இளைஞர்களை நோக்கி விடுக்கப்பட்ட இந்த அறிவை ஆயுதமாக்கும் அழைப்பிற்காகத்தான், அக்கால ரோம அரசால் சோக்ரட்டீஸ் விசம் வைத்துக் கொல்லப்பட்டார்.

அறிவைப் பற்றிப் பேச முனையும் எவர்க்கும் முடிவுகள் இப்படித்தான் அமைந்து விடுகின்றது. அண்மையில் கூட அரசியல் வாதியொருவர் "உண்மையொன்றைப் பேச விழைந்து" அகப்பட்டுக் கிடப்பதை காணமுடிகின்றது.

எப்போது சமூகம் அடிமாடுகளாக நடைபயிழத் தொடங்குகின்றதோ அப்போதெல்லாம் யாராவது உண்மை அறிவைப் பேச முனைந்து உயிர்ப்பலியாகிப் போவதைக் காணலாம்.

அறிவுள்ள சமூகத்தில் அறிவைப் பற்றிப் பேச வேண்டிய தேவை இருப்பதில்லை. அதை அங்குள்ளவர்கள் எல்லோரும் உணர்ந்து இருப்பதுடன் அறிவைத் தமது ஆயுதமாகப் பயன்படுத்திக் கொண்டும் இருப்பர்.

அறிவைக் குழந்தைகளுக்குப் பயிற்றுவிப்பவர்களுள் பெற்றோருக்கு அடுத்தபடியாக இருப்பவர்கள் ஆசிரியர்கள் தான்.

ஆசிரியர்களின் அறிவினால் செதுக்கப்படும் மாணவ மணிகளே அறிவுச் செல்வங்களாக உருவாகி விடுகின்றனர்.

அறிவைப் பிரித்து நோக்கினால் அப் பிரிப்பு பட்டறிவு என்றும் கேட்டறிவு என்றும் பிரிந்து விடுகின்றது. கேட்டறிவு என்பது கற்றலாகவும் பட்டறிவு என்பது அனுபவமாகவும் எமக்குக் கிடைக்கின்றது.

அறிவை ஆயுதமாக்கக் கற்றுக்கொள்வோம் நாம்... அது ஒன்றும் கடினமில்லை.. காகம் தூக்கிச்சென்ற வடையைப் பறித்துச் சென்ற நரியின் முறை எதுவோ அதுவே அறிவாயுதம்.

இரத்தமின்றிய புரட்சியின் ஊடே எமக்குரியதைப் பெற்றுக் கொள்வோமா?

## திருமலையிலும் இளைஞர் பாராளுமன்ற தேர்தல்

இலங்கையின் இளைஞர் பாராளுமன்றத் தேர்தல் கடந்த 4-5-2013 சனிக்கிழமை அன்று நாடளாவிய ரீதியில் இடம்பெற்றது. திருகோணமலை பட்டிணமும் சூழலும் பகுதிக்கான இளைஞர் பாராளுமன்றத் தேர்தலில் சமீர, ரமேஸ் தர்ஷன், நௌஷாத், பவித்ரன் ஆகிய வேட்பாளர்கள் போட்டியிட்டனர்.

தேர்தல் முடிவுகளின் படி சமீர எவ்வித வாக்குகளையும் பெறாத நிலையில் நௌசாத் 6 வாக்குகளையும் ரமேஸ் தர்ஷன் 183 வாக்குகளையும் பெற்றதோடு பவித்ரன் 294 வாக்குகளைப் பெற்று தேர்தலில் வெற்றி பெற்றார். மேலும் இத்தேர்தலில் 486 பேர் தம் வாக்குகளை பதிவு செய்திருந்த நிலையில் அதில் 3 வாக்குகள் செல்லுபடியற்ற வாக்குகளாக பதிவுசெய்யப்பட்டிருந்தது.

நாடளாவிய தேர்தல்களின் பிரகாரம் 335 இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர்களும் 77 செனட் சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். இவர்களுக்கான முதலாவது அமர்வு எதிர்வரும் 23ம் திகதி சனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் தலைமையில் மக கமவில் உள்ள இளைஞர் பாராளுமன்றில் இடம்பெறவுள்ளது. இத்தினத்தில் பதின்மூன்று அமைச்சர்களும், சபாநாயகர், பிரதிச் சபாநாயகர், எதிர்க்கட்சித் தலைவர், ஆளும் கட்சி அமைப்பாளர், எதிர்க்கட்சி அமைப்பாளர் ஆகியோர் தெரிவு செய்யப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.



## களைகட்டும் விசாப் பண்டிகை [வெசாக்]

திருக்கோணமலை மரக்கறி வர்த்தக சங்கத்தினர் 32 வது தடவையாக இவ்வருடமும் வெசாக் பந்தலை அமைக்கும் முயற்சியில் இறங்கியுள்ளனர்.

திருகோணமலையில் 1963ம் ஆண்டிலேயே முதலாவது விசாகப் பண்டிகைப் பந்தல் அமைக்கப்பட்டது. அவ்வருடத்திலிருந்து தொடர்ந்து விசாகப் பண்டிகைப் பந்தல் வருடாவருடம் அமைக்கப்பட்டு வந்தாலும் சில வருடங்களில் நாட்டின் உள்நாட்டுக் கலவரங்களால் இப் பந்தலை அமைக்கும் பணிகள் மந்தமடைந்திருந்தன. இவ்வருடம் ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி மைதானத்தில் அமைக்கப்படுகின்ற விசாகப் பண்டிகைப் பந்தலானது 65 அடி அகலமும் 45 அடி உயரமும் கொண்டதாக அமைக்கப்பட உள்ளது. இதற்கான ஆரம்பக்கட்ட வேலைகள் இம் மைதானத்தில் ஆரம்பமாகியுள்ளன.

# ஆசியமுரசு

## தோனியின் விஷ்ணு ரூபம்!



அண்மையில் வெளியாகிய தோனியின் விஷ்ணுரூப விளம்பரமொன்று சர்ச்சையைக் கிளப்பியுள்ளது. இவ்விளம்பரப் படத்தைப் பார்த்த விஷ்ணு பக்தர் ஒருவர் இவ் விஷ்ணு ரூப விளம்பரத்திற்கு எதிராக சட்ட நடவடிக்கையினை மேற்கொள்ள முனைப்புக் காட்டி வருகின்றார்.

## வங்கதேச கட்டிட விபத்தில் பலி

வங்கதேச தலைநகர் டாக்கா அருகில் உள்ள சாவர் பகுதியில் ஆடை தொழிற்சாலைகள் இயங்கி வந்த 8 மாடி அடுக்கு கட்டிடம் ஒன்று கடந்த மாதம் 24ம் திகதி இடிந்து விழுந்தது. அப்போது அங்கு பணியில் இருந்த ஏராளமான பெண்கள் உட்பட சுமார் 3000 ஆயிரம் பேர் இடிபாடுகளில் சிக்கினர். தொடர்ந்து மீட்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன. வங்கதேசத்தை உலுக்கிய இந்த விபத்தில் தொடர்ந்தும் ஏராளமான உடல்கள் மீட்கப்பட்டுள்ளன. பலி எண்ணிக்கை 800ஐ நெருங்கியது. தற்போதைய நிலவரப்படி 794 பேர் இறந்ததாகவும், 2437 பேர் காயங்களுடன் மீட்கப்பட்டிருப்பதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். மேலும் பலரைக் காணவில்லை. ஆனால் சம்பவம் நடை[illegible] பேர் அங்கு இருந்தனர் என்பது இன்னும் தெளிவாகத் தெரியவில்லை

## ஓமணக்குட்டி அணிந்தார் 5 கிலோ தங்கம்



இந்தியாவின் கேரளா மாநிலத்தில் உள்ள பிரபல்யமான தங்கநகை வர்த்தகர் தனது மகளின் திருமணத்தின் போது ஐந்து கிலோ எடையுள்ள தங்க ஆபரணங்களை அணிவித்து அழகு பார்த்தது பிரபல்யமான செய்தியாக பரவத்தொடங்கியுள்ளது.

## கிழக்கு மாகாணம் மீண்டும் முதலிடம்

ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் கல்வி அமைச்சினால் தரம் பத்து மாணவரிடையே 2012ல் நடாத்தப்பட்ட சுகாதார ஆரோக்கிய வினாவிடைப் போட்டியில் அகில இலங்கை ரீதியில் கிழக்கு மாகாணம் முதலிடத்தைப் பெற்றுக்கொண்டது.

இவ்வருடம் வெளியிடப்பட்ட இப் போட்டியின் முடிவுகளின்படி கிழக்கு மாகாணத்தின் கல்முனை வலயம் முதலிடத்தைப் பெற்றுக்கொண்டுள்ளது. இதே வேளை 2011 இம்பெற்ற சுகாதார ஆரோக்கிய வினாவிடைப் போட்டியில் திருகோணமலை கல்வி வலயம் அகில இலங்கை ரீதியில் முதலிடத்தை பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## கிழக்குப் பாடசாலைகளில்
### ஐந்து நாள் ஆய்வுகூட ஆய்வு

இவ்வாரத்தின் முதல் ஐந்து நாட்களையும் பாடசாலை ஆய்வுகூட வாரமாக பிரகடனப்படுத்தி உள்ளதாக கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் எம்.ரீ.ஏ. நிஸாம் அறிவித்ததை அடுத்து கிழக்கு மாகாணப் பாடசாலைகளின் விஞ்ஞான ஆய்வுகூடங்கள் கள ஆய்வுகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

ஆய்வுகூடங்களை சுத்தமாகவும், உயிர்ப்புள்ளதாகவும் மாற்றுவதற்காகவே இந் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக மாகாண விஞ்ஞான பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் எம். சௌந்தரராஜன் தெரிவித்துள்ளார்.

## தலையணைச் சண்டைக் களத்தில் சிறுவன் பலி

புத்தாண்டை முன்னிட்டு கடந்த 21.04.2013 லிங்கநகர் மைதானத்தில் ஏற்பாடு செய்திருந்த விளையாட்டு நிகழ்விற்காக அமைக்கப்பட்டிருந்த தலையணைச் சண்டைக் களத்தில் நண்பர்களோடு ஏறி விளையாடிக் கொண்டிருந்த வேளை விபத்துக்குள்ளானதால் லிங்கநகரைச் சேர்ந்த எட்டு வயதையுடைய மோகனகுமார் யோசிகன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் 02.05.2013 அன்று காலமானார்.

இதே வேளை குறித்த விளையாட்டு நிகழ்வில் சிறுவர்களை பாதுகாக்கும் படியும் அவர்களை கடினமான விளையாட்டுக்கள் இடம்பெறும் இடங்களுக்கு அனுமதிக்க வேண்டாம் எனவும் ஏற்பாட்டாளர்கள் ஒலிபெருக்கி மூலம் அடிக்கடி நினைவூட்டிக்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசமுரசு

## உலக முதலைகள் கூட்டத் தொடர் இலங்கையில்..

சர்வதேச இயற்கைப் பாதுகாப்பு அமைப்பானது தனது உலக முதலைகள் கூட்டத்தொடரினை இலங்கையில் நடாத்துவதற்குத் தீர்மானித்துள்ளது.

மே மாதம் 20ம் திகதி தொடக்கம் 23ம் திகதி வரை நடைபெறவுள்ள இக் கூட்டத்தொடர் நீர்கொழும்பில் நடைபெறவுள்ளது. சுமார் 250 முதலை விற்பன்னர்கள் கலந்துகொள்ளவுள்ள இக் கூட்டத் தொடரில் முதலைகள் பாதுகாப்பு மற்றும் அவற்றின் வாழ்வு சம்பந்தமாக எழுந்துள்ள தற்போதைய சமூகச் சூழ்நிலை போன்றன பற்றிக் கலந்துரையாடப்படவுள்ளது.

## மத்தளவிற்கான தனது பயணத்தை நிறுத்திக் கொண்டது ஏர் அராபியா விமான சேவை

முதன் முதலில் மத்தள விமான நிலையத்திற்கு தனது சேவையை பரவலாக்கிய சர்வதேச விமான சேவை நிறுவனமான ஏர் அரேபியா அச் சேவைகளை ஆரம்பித்த ஆறு வாரங்களுக்குள் மத்தள விமான நிலையத்திற்கான தனது சேவையை நிறுத்தியுள்ளது.

மத்திய கிழக்கின் சார்ஜாவைத் தளமாகக் கொண்டியங்கும் பிரபல்யமான விமான சேவை நிறுவனமான ஏர் அரேபியாவின் வலைப்பின்னல் ஆசனப் பதிவுகளில் இருந்து மத்தள சர்வதேச விமான நிலையப் பதிவுகள் அகற்றப்பட்டுள்ளன என "ரூட் ஒன்லைன்" தெரிவித்துள்ளது.

வாராந்தம் இரு விமான சேவைகளை ஏர்அரேபியா சார்ஜா விற்கும் மத்தள விற்கும் இடையே மேற்கொண்டிருந்தது. இச் சேவைகளை மத்தள விமான நிலையம் போக்குவரத்திற்காக திறந்துவிடப்பட்ட நாளில் இருந்து ஏர்அரேபியா மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத் தக்கது.

ஏர்அரேபியா தனது சேவைகளை மே மாதம் முதல் வாரத்திற்கு நான்கு முறை என உயர்த்த முன்னரே முடிவு செய்திருந்தது எனினும் தற்போது தனது சாதாரண சேவையைக் கூட மத்தள விமான நிலையத்திற்கு நடாத்துவதில்லை எனத் தீர்மானித்துள்ளது.

## தலைவர்களின் படங்களுக்கு தடையா?

**இராவணா சக்தியின் அடுத்த நகர்வு**

தென்னிந்திய திரைப்பட நட்சத்திரங்களான ரஜினிகாந்த், கமலஹாசன், சரத்குமார் ஆகிய நடிகர்களின் திரைப்படங்களை இலங்கைக்கு கொள்வனவு செய்வதை நிறுத்த வேண்டும் என இராவணா சக்தி அமைப்பு இலங்கைத் திரைப்படக் கூட்டுத்தாபனத்திடம் கோரிக்கைகளை முன்வைத்துள்ளது.

குறித்த நடிகர்கள் தொடர்ச்சியாக இலங்கைக்கு எதிரான செயற்பாடுகளில் ஈடுபட்டு வருவதாக இவ் அமைப்பின் ஏற்பாட்டாளர் இந்தேகந்தே சத்தாதிஸ்ஸ தேரர் சுட்டிக்காட்டியுள்ளார். எனினும் குறித்த நடிகர்களின் படங்களை இறக்குமதி செய்ய விசேட அனுமதி பெற்றுக்கொள்ளப்பட வேண்டும் என திரைப்படக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதே வேளை தமது கதாநாயக தலைவர்களின் படங்களுக்கான அனுமதி குறித்து இலங்கை ரசிகர்கள் பெரும் ஆர்வத்தோடு எதிர்பார்த்துள்ளனர்.

## அதிபருக்கு விளக்கமறியல்

பாடசாலை தண்ணீர் குழாயிலிருந்து சட்டவிரோதமான முறையில் வீட்டுக்கு தண்ணீர் எடுத்த அதே பாடசாலைச்சேர்ந்த அதிபர் ஒருவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கெங்கல்ல தமிழ் மகா வித்தியாலயத்தைச்சேர்ந்த அதிபர் விஸ்வநாதன் மங்களேஸ்வரி என்பவரே இவ் வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சட்டவிரோதமான முறையில் தண்ணீர் எடுத்தமையினால் சுமார் 9 இலட்சம் ரூபாவை மோசடி செய்துள்ளார் என்று அவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

## அமெரிக்கா, பாகிஸ்தானினால் தேடப்படும் பயங்கரவாதி இலங்கையூடாக பயணித்து இந்தியாவில் தலைமறைவு

சர்வதேசக் காவல்துறைக்குக் கிடைத்த தகவல் ஒன்றை அடுத்து இந்திய உளவுத்துறைக்கு வழங்கிய துப்பொன்றினால் பாகிஸ்தானியப் பயங்கரவாதியொருவர் ஆந்திரப் பிரதேச குக்கிராமமொன்றில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்டவர் சுமார் ஏழு ஆண்டுகளாக இந்தியாவில் தலைமறைவு வாழ்க்கை வாழ்வது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

வலிதான வதிவிட அனுமதிப்பத்திரமின்றி தலைமறைந்திருந்த நிஷார் அஹமட் என்ற பாகிஸ்தானியப் பயங்கரவாதியான இவர் ஆந்திர பிரதேச குடப்பா கிராமத்திற்கு அருகில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார். ஆரம்பக்கட்ட விசாரணைகளின் போது இவர் இலங்கை ஊடாக இந்தியா வந்திறங்கியுள்ள விடயம் தெளிவாகியுள்ளது. 2006ம் ஆண்டில் இவர் இலங்கையிலிருந்து இந்தியாவிற்கு வந்துள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. எனினும் இவரை நேரடியாக பாகிஸ்தானிடம் கையளிக்க இந்தியா விரும்பாமல் இலங்கைக்குத் திருப்பியனுப்ப முடிவு செய்துள்ளது. இலங்கைக்கு நாடுகடத்தப்படும் இவரை இலங்கை பாகிஸ்தானிடம் கையளிக்கும் என்ற தகவல் உறுதிப்படுத்தப்படாமல் வெளியாகியுள்ளது.

## நேரலை ஒலிபரப்பாக பாராளுமன்ற அமர்வுகள்

பாராளுமன்ற ஊடகவியலாளர் சங்கம் சபாநாயகர் அலுவலகத்துடன் இணைந்து நடத்திய பாராளுமன்றத்திற்கும் ஊடகத்திற்குமிடையில் காத்திரமான நட்புறவை ஏற்படுத்துதல் என்ற தொனிப்பொருளிலான செயலமர்வு பாராளுமன்ற முதலாவது குழு அறையில் நடைபெற்றது. இங்கு பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றிய சபாநாயகர் "நான் சபாநாயகராக நியமிக்கப்பட்ட நாள் முதல் பாராளுமன்ற அமர்வுகளை நேரடியாக ஒலி, ஒளிபரப்பு செய்வதற்கு முயற்சி மேற்கொண்டேன். இது தொடர்பில் இந்திய லோக்சபா சபாநாயகருடனும் பேச்சு நடத்தினேன். அவரது கருத்து மற்றும் வழிகாட்டலுடன் இந்த நடவடிக்கையை எமது பாராளுமன்றத்தில் முன்னெடுக்க கவனம் செலுத்தப்பட்டது. லோக்சபாவுக்கென 24 மணி நேரமும் இயங்கும் தொலைக்காட்சி சேவை இருக்கிறது. இந்திய பாராளுமன்றம் இதற்கான செலவை செய்கிறது.

இலங்கையிலும் பாராளுமன்ற அமர்வுகளை நேரடியாக காண்பிக்க முடியும். முதலில் வானொலியூடாக ஒலிபரப்புவது குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளது. பாராளுமன்றத்தில் பேசப்படும் சகல விடயங்களும் மக்களுக்கு செல்ல வேண்டும். பாராளுமன்ற உறுப்பினர்கள் நடந்து கொள்ளும் விதம் குறித்தும் உரை குறித்தும் மக்கள் அறிந்து கொள்ள வேண்டும். நிலையியற் கட்டளையின்படி எம்பிக்களின் உரைகளை கத்தரித்து திருத்தம் செய்து ஊடகங்களுக்கு வழங்காது முழுமையாக வழங்கப்பட வேண்டும் என்றே நான் விரும்புகிறேன்" எனக்குறிப்பிட்டார்.

## முப்பத்தைந்தாவது அகவையில் உவர்மலை விவேகானந்தா

திருகோணமலை உவர்மலை விவேகானந்தாக் கல்லூரியின் கல்லூரி தின நிகழ்வு கடந்த புதன் கிழமை உவர்மலை விவேகானந்தா கல்லூரி கலையரங்கில் அதிபர். சீ. மதியழகன் தலைமையில் நடைபெற்றது. குறித்த நிகழ்வுக்கு பாடசாலையின் முதல் அதிபர் வி. தங்கவேல் அவர்கள் முதன்மை அதிதியாக அழைக்கப்பட்டிருந்தார். நிகழ்வில் பாடசாலைக்கு புதிதாக தெரிவுசெய்யப்பட்ட மாணவத் தலைவர்களுக்கான சின்னஞ் சூட்டல் வைபவமும், பாடசாலை தினத்தையொட்டி இடம்பெற்ற போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்குமான பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டது, மேலும் குறித்த நிகழ்வில் சமூகத்தில் முதன்மையாளர்களாக திகழும் கல்லூரியின் பழைய மாணவர்கள் முப்பத்தைந்து சுடர்களை ஏந்தி நின்று கல்லூரிக்கு வணக்கம் செலுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## சாரணர்களுக்கான ஜனாதிபதி விருது

தி/உவர்மலை விவேகானந்தா கல்லூரியின் 7வது திருமலை சாரணர் குழுவின் சாரணர்களுக்கான ஜனாதிபதி விருது வழங்கும் வைபவம் 08.05.2013 அன்று நடைபெற்றது. இதில் சாரணத்தலைவர் சி.விவேகானந்தனின் நெறியாளுகையில் ஜனாதிபதி விருதினை பெற்றுக் கொண்டவர்களுக்கு சின்னங்கள் சூட்டப்பட்டன.



# "காந்தி ஐயா"

த. ஜீவராஜ்

திருகோணமலைக்கு வந்து "காந்தி ஐயா" என்று கேட்டால் சிறுபிள்ளைகள் கூட ஆர்வத்துடன் அவர் பற்றிச் சொல்வார்கள். இத்தனைக்கும் அவர் அரசியல்,சினிமா சார்ந்தவரோ அல்லது பிரபல தொழிலதிபரோ இல்லை.

உயரம் குறைந்த,நரைத்த தாடியுடன் கூடிய கருணை பொழியும் முகத்துக்குச் சொந்தக்காரர். அவர் ஒரு ஏழை. ஓய்வு பெற்ற பாடசாலை அதிபர். அவரது ஒரே சொத்து புத்தகங்கள்தான். சமய,கலாச்சார,இலக்கிய நூல்களால் நிறைந்து கிடக்கிறது அவர் வீடு. அவற்றினை சேவை நோக்கோடு விற்பனை செய்வதே அவரது வேலை. திருகோணமலையில், பலரது வாசிப்பு பழக்கத்தின் உந்து சக்தியாக இருப்பவர்.

திருகோணமலையில் நடைபெறும் எந்தவொரு விழாவிலும் அவரது புத்தகக் கடையினை நீங்கள் காணலாம். படிக்கும் காலத்தில் நிறைய சிறு புத்தகங்களை அவரிடம் இருந்துதான் நான் வாங்கி வாசித்தேன்.

92 வது வயதினைத்தொடும் காந்தி ஐயாவின் சொந்தப்பெயர் பொன்னம்பலம் கந்தையா. 1918 இல் யாழ்.மாதகலில் பிறந்த இவரது பெரும்பாலான வாழ்க்கைகாலம் திருகோணமலை மக்களது முன்னேற்றத்துக்குப் பயன்பட்டது. இவர் [illegible] வித்தியாலயத்தில் கடமையாற்றிய



காலத்தில் தனது ஒருவருட சம்பளத்தை [illegible] அபிவிருத்திக்காக வழங்கியிருந்தார். ஆர்வத்துடன் வரும் இளைஞர்களுக்கு இலவசமாக புத்தகங்களை வழங்குதல், நாடி வருபவர்களுக்கு தன்னாலான உதவிகளைச் செய்தல், கதிர்காம யாத்திரை முதலான சமய நிகழ்வுகளைக் கொண்டு நடத்துதல் என்று நீண்டு செல்கிறது இவர் பணி. 1945 முதல் காந்திய வழி நிற்கும் இவர் இடுப்பில் ஒரு துண்டு வேட்டியும், மார்பில் ஒரு சால்வையும் அணியும் வழக்கத்தைக் கொண்டவர். இதனால் எல்லோரும் காந்தி ஐயா என்றே அன்போடு அழைப்பர்.

அவரிடம் யார் சென்றாலும் "ஆனந்தம், ஆனந்தம்" என்று சொல்லி வரவேற்பார். இவ் வார்த்தைகளுக்கு ஏற்ப ஆனந்தமாகவே , உள்ளத்தில் காந்திய உணர்வோடு இன்றும் இளமையாக காட்சி தருகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுமட்டுமல்ல மன்னரது ஆற்றல்மீது அவனுக்கேற்பட்டுள்ள மலைப்பும் பன்மடங்கு அதிகரித்திருந்தது. என் ஒவ்வொரு அசைவும் அவருக்கு தெரிந்திருக்கிறது. அவரை விஞ்சி இந்த இராச்சியத்திலும் சரி, நாட்டிலும் சரி எதுவும் நடந்துவிடமுடியாது என்ற எண்ணம், அவனுக்கு அரசர் மீது இருந்த மதிப்பைப் பலமடங்கு உயர்த்தி விட்டது.

எனினும் தன் வாழ்வு என்ற பேச்சுக்கே இடமில்லாமல் போனது அவனுக்குக் கோபத்தைத் தந்தது.... தன்னால் நினைத்தபடி எதையும் செய்துவிடமுடியாது என்ற எண்ணம் தலைதூக்கியபோது ஆத்திரமல்ல இயலாமை அவனை மேற்கொண்டது.

நடைப்பிணமாக வீரர்களுடன் விருந்தினர் விடுதிக்குத் திரும்பினான் உதயகுமரன். அவன் மனதில் உற்சாகம் அற்றே போய்விட்டது.தான் எடுக்கப்போகும் முடிவால் யார் யாருக்கு என்ன நடக்கக் கூடும் என்று சிந்தித்துப்பார்த்தே களைத்துப்போனான். வழியில் யாருடனும் எதுவும் பேசவில்லை. அவனது மன ஓட்டத்தைப் புரிந்து கொண்ட இளஞ்செழியன் அவனைக் குழப்பவில்லை. அவன் குதிரைகூட துள்ளல் நடையில்தான் போய்க் கொண்டிருந்தது. எஜமானைக் குழப்ப அதற்கும் இஸ்டம் இருக்கவில்லை.

அன்று பூரணை முழுநிலவு நாள்! ஏற்கனவே அடிவானில் தங்கத்தாம்பாளம் போல் சந்திரன் அடிவானில் உதயமாகிக் கொண்டிருந்தான்.

ரங்கநாயகி இரண்டு மூன்றுநாட்கள் சரியாகச் சாப்பிடவும் இல்லை தூங்கவும் இல்லை. உதயகுமரன் சொன்னவைகளையே மனதுக்குள் இரைமீட்டு முடிவெடுக்க கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தாள்.

உதயகுமரன் தனக்காக, தன் பதவி, குடும்பம், உற்றார்உறவினர் ஏன் அவனுக்கு கிடைக்கக்கூடிய எதிர்காலத்தையே உதறித்தள்ள முன்வந்துவிட்டான் என்றால், அவனது அன்பு எவ்வளவு உறுதியானது உண்மையானது என்று எண்ண எண்ண அவன் மனதில் உயர்ந்து கொண்டே போனான்.

அதே நேரம் தானும் அதற்கீடாக சகலதையும் சகலரையும் துறந்து அவனே தஞ்சம் என்று அவன் எடுக்கும் முடிவை ஏற்றுக் கொண்டு அவனோடு

தம்பலகாமம் த. வேலாயுதம்

# தம்பன் கோட்டை

பாகம் - 15

வரலாற்று நாவல்

சென்றுவிடவேண்டியதுதான். அதிலும் அவளுக்கு முடிவெடுக்கச் சிரமமாக இருந்தது.

தன்னை வளர்த்து ஆளாக்கி அறிவூட்டி... தன் கடைசிக் காலத்துக்கென தன்னையே நம்பியிருக்கும் தன் தந்தையை விட்டுச் செல்வது துரோகம் ஆகாதா? யாரோடும் அவளால் இதுபற்றி கலந்து பேச முடியவில்லை. அவளுக்கு நெருங்கிய சிநேகிதி என்று யாரும் இருந்ததில்லை. குழப்பம் கூடக் கூட பசி குறைந்தது.

வயிறு வெறுமையாக நித்திரை தொலைந்தது. இதற்கிடையில் நாளை மறுநாள் அவர் என்னைச் சந்திக்கும்போது என்ன கூறப்போகிறாரோ... நான் என்ன சொல்லப்போகிறேனோ? என்ற பதைபதைப்பு அவளுக்குள் உருவாகத் தொடங்கிற்று.

இதுவரைக்கும் தன்னைப்பற்றியோ, தன்வாழ்க்கை எப்படி அமைந்திருக்க வேண்டும் என்பதைப் பற்றியோ கொஞ்சமும் கவலையின்றி திரிந்தவளுக்கு, எல்லாம் அப்பாவுக்கு தெரியும்... அவர் பார்த்துக் கொள்வார்... என்ற முனைப்பில் வாழ்ந்தவளுக்கு... இப்போது எல்லாம் ஒரே சுமையாகத் தெரிந்தது. இதைவிடல் குடமுருட்டியாற்று பக்கம் போகாமல் இருந்திருக்கலாம்.... அவரைக் காணாமல் இருந்திருக்கலாம்....

இந்த உறவை தொடங்காமலே இருந்திருக்கலாம் என்ற சிந்தனைகூட களைத்துப்போன அவள் மனதில் இருந்து வந்தது.

கோணேஸ்வரா நான் சிறு பெண். என்னால் ஒரு முடிவுக்கும் வரமுடியவில்லை. நீயே ஒரு வழிகாட்டு. அதை நான் ஏற்றுக் கொள்ளுகிறேன் என்று மானசீகமாக வேண்டிக்கொண்டு, அத்தையை துணைக்கு கூட்டிக்கொண்டு கோயிலுக்குப் போய்வந்தாள்.

சதுர்வேத மங்கலத்தில் படைவீரர்களுக்குள் ஒரு விவாதமே நடந்து கொண்டிருந்தது. நாளை சுட்டெரிக்கும் கோடை வெயில் பயணமா? இன்றேல் இதோ வெண்ணிலவு பகலாய்க் காயும் குளிரான இரவில் புறப்பட்டு தம்பன் கோட்டையில் ஆறுதலாக ஓய்வெடுப்பதா?

சதுர்வேத மங்கலத்தின் விழா பரபரப்பு, சந்தடி, இரைச்சல்கள் சரியாக ஓய்வெடுக்க அவர்களை அனுமதித்திருக்கவில்லை. எவ்வளவு விரைவாகத் தம்பலகாமம் செல்லமுடியுமோ அவ்வளவுக்கு அதிகமாக ஓய்வெடுக்கலாம் என்ற முடிவுக்கு அவர்கள் இறுதியில் வந்து சேர்ந்தார்கள்.

இதற்கு தளபதியின் ஒப்புதல் வேண்டுமே, இளஞ்செழியனைப் பார்த்தார்கள். அவனுக்கு தளபதியைக் குழப்ப விருப்பமில்லை. யோசித்தான்.... இவர்கள் சொல்வதுபோல் பயணத்தை விரைவுபடுத்தினால், அவரும் அவரது முடிவைப்பற்றி ரங்கநாயகி அம்மையாருடன் சீக்கிரம் பேசி அவரது குழப்பத்திற்கெல்லாம் முடிவு கட்டலாம் அல்லவா?... இளம் பராயத்து நண்பனான அவனுக்கு உதயகுமரன் ரங்கநாயகி பற்றி தன்னுடன் அதிகம்பேசாதது குறித்துக் கொஞ்சம் உள்ளூர மனவருத்தம்தான். இருந்தாலும் அவன் இத்தனை தூரம் கலங்கி நின்றதை அவன் அறியான்.

ஆதலால்.... விரைவில் ஒரு முடிவைக் காண்பது நல்லது என்றே பட்டது. உதயகுமரனை நெருங்கினான். பிரபோ! (என்னதான் நண்பனாக இருந்தாலும் தளபதிக்குரிய மரியாதையை அவன் கொடுக்கத் தயங்கியதில்லை.) முழுநிலவின் வெளிச்சத்தில் பயணப்பட்டு சீக்கிரமே கோட்டையைப் போயடைந்தால் ஆறுதலாக ஓய்வெடுக்கலாம் என்று படையினரின் ஆசையாக இருக்கிறது. தங்கள் முடிவு?என்று இழுத்தான்.

எதிர்காலம் பற்றியே முடிவெடுக்க முடியாமல் தவித்துக் கொண்டிருந்தவன் இது பற்றி என்னமுடிவெடுப்பது? எப்போதாவது போகத்தானே போகிறோம். இப்போது போனால் என்ன? பிறகு போனால் என்ன. இருந்தாலும் படைவீரர்களின் நலனில் அவனுக்கு இருந்த அக்கறை அவனுக்கு சரி அவர்களிடம் போல் புறப்படலாம் ஆயத்தமாகச் சொல் இரவு உணவான பிறகு ஒரு நாழிகையானதும் புறப்படலாம் என்று சொல்லி அனுப்பிவிட்டான்.

தொடரும்...

**சென்ற வாரம்...**
மன்னரது வார்த்தைத் தொடர்கள் அவன் நாடி நரம்புகளை எல்லாம் ஒடுங்கச் செய்து விட்டன.




# கிழக்கிலங்கைத் தமிழர்களின் வரலாறு ஒரு நோக்கு...

கிழக்குத் தமிழர்களிடையே கிராம மட்டத்தில் 'ஊர் போடியார்' வழக்கமும் 'குடி' முறையானது சமூக இடையூட்டாட்டத்தைக் கட்டுப்படுத்தவும் நிறுவனப்படுத்தப்பட்டுக் காணப்பட்டது. அத்தோடு, கண்டி இராச்சியம் மூலம் அறிமுகமான வன்னிமை அதிகார முறையும் அரசியலை வரையறுத்துக் காணப்பட்டது. முக்கிய சமூக குழுவாக முக்குவர் காணப்பட்டனர். இவர்கள் தென்னிந்தியாவிலிருந்து தொடர்ச்சியாக இலங்கை மீது படையெடுத்தனர். உள்ளூர் பாரம்பரிய ஆவனமான மட்டக்களப்பு மான்மியம் கிழக்கிலங்கை குடியேற்றம் பற்றி குறிப்பிடுகிறது.

## உள்ளூர் ஆதாரங்கள்

மட்டக்களப்பு மான்மியமானது மட்டக்களப்பு மாவட்டத்தில் முக்குவர் குடியேற்றம் பற்றி அவர்களுடைய பார்வையில் குறிப்பிடுகிறது. இருப்பினும் கிழக்குத் தமிழர்கள் எல்லோரும் முக்குவர் அல்ல.

இது வரலாற்று ரீதியான கதைகளை உள்வாங்கி முக்குவ பார்வையில் இடங்களுக்குரிய பெயர்களை விளக்குகிறது. முக்குவர் குடியிருப்பை அமைத்ததும் மற்றொரு மீன்பிடியுடன் தொடர்புபட்ட சாதியான திமிலருடன் முரண்பட்டனர். திமிலர் கிழக்கு மற்றும் வடக்கு பகுதியில் காணப்பட்டனர். அவர்களின் ஆரம்ப குடியேற்ற இடம் திமிலைதீவு ஆகும். மட்டக்களப்பு மான்மியம் இங்கு துறைமுகம் காணப்பட்டதாக குறிக்கிறது. திமிலரால் அதிகம் மீன்கள் பிடிப்பட்ட இடமாகிய வலையிறவிலும் அவர்கள் குடியேற்றம் அமைந்தது. மீன்பிடி மூலமான முரண்பாடு எவ்வாறு சிறிய படுகொலையாக திமிலருக்கு மாறியது என்பதை மான்மியம் விபரிக்கின்றது. இந்தியாவிலிருந்து மட்டக்களப்பிற்கு வியாபர நோக்கோடு வந்த முஸ்லிம்கள் என நம்பப்படும் இன்னுமொரு குழுவாகிய பட்டாணியர் உதவியுடன் திமிலர் தோற்கடிக்கப்பட்டு, மட்டக்களப்பு - திருகோணமலை எல்லையாகிய வெருகல் வரை துரத்தப்பட்டனர்.

சில கிராமங்களின் பெயர்கள் போரின் நினைவுச் சின்னங்கள் போன்று காணப்படுகிறது. மட்டக்களப்பு நகரை அண்மித்துக் காணப்படும் சத்துருக்-கொண்டான் என்னும் கிராமமானது "சத்துரு கொல்லப்பட்டான்" என்ற அர்த்தத்தில் அமைந்துள்ளது. திமிலரை விரட்டிவிட்டு வெற்றியுடன் திரும்பிய வீரர்கள் சந்தித்த இடம் சந்திவெளி எனப்படுகிறது. இன்று கிழக்குப் பல்கலைக் கழகம் காணப்படும் இடமாகிய வந்தாறுமூலை (வந்து ஆறிய மூலை), வெற்றி வீரர்கள் இளைப்பாறிய இடமாக [illegible]படுகிறது. இன்று மட்டக்களப்பு மாவட்டத்தில் முஸ்லிம்கள் அதிகம் காணப்படும் இடமாகிய ஏறாவூர், திமிலரைத் தோற்கடிக்க உதவிய முஸ்லிம்களுக்கு முக்குவர் குடியேற அளித்த இடமாகும்.

இன்னுமொரு சமூகக் குழுவாகிய வெள்ளாளர் தங்கள் சாதி அமைப்புடன் கிழக்கில் குடியேறினார்கள். வெள்ளாளர் தங்கள், இலங்கை மீது படையெடுத்த கலிங்க மாகனின் (ஆட்சி 1215 - 1236) வீரர்களின் பரம்பரை என்பர். யாழ்ப்பாண வைபவமாலையின்படி, இவ்வரசன் யாழ்ப்பாண அரசு அமைத்த கருவியாக கருதப்படுகிறான். இந்தியாவின் இன்றைய ஒரிசாவில் இருந்து, கலிங்க மாகன் தென்னிந்திய வீரர்களைக் கொண்டு படையெடுத்திருந்தான். இவனுடைய படையெடுப்பு இலங்கை இலக்கியங்களில், சிங்கள உலர்நில நாகரீகம் வீழ்ச்சியடைய முக்கிய காரணங்களில் ஒன்று எனக் குறிப்பிடப்படுகிறது.

பாரம்பரிய மற்றும் புகழ்பெற்ற ஆதாரங்களின்படி, இலங்கை மற்றும் கிழக்கில் முதல் தமிழ் குடியேற்றங்களை உருவாக்கியவர்கள் தமிழ்நாட்டிலிருந்து மட்டுமல்ல, கேரளா கடற்கரையோரங்களிலிருந்தும் வந்தனர் என்பதை திட்டவட்டமாகக் கூற முடியும்.

வேடுவர் எனப்படுவோர் இலங்கை காடுகளில் வேட்டையாடி வாழும் வாழ்க்கையை பழக்கமாகக் கொண்டு வாழும் மனிதர்களாவர். இவர்கள் இலங்கைக்கு வேறு எந்த நாட்டில் இருந்தும் வந்து குடியேறாதவர்கள் என்பதால் இவர்கள் இலங்கையின் பழங்குடிமக்களும் ஆவர்.

இவர்கள் இலங்கைக்கு ஆரியரின் வருகைக்கு முன்னரே, இலங்கையின் வரலாற்றுக் காலம் முதல் வசிப்பவர்கள் என்றும், இவர்கள் தென்னிந்திய பழங்குடி மரபினருடன் ஒத்த தன்மைக்கொண்டவர்கள் என்றும் வில்லியம் கெய்கர்தெரிவித்துள்ளார்.

இலங்கை காடுகளில் வசிக்கும் இவர்கள் சாதாரண மனிதர்களின் வாழ்க்கைக்கு பண்படாதவர்களாக, காடுகளில் வேட்டையாடி வாழப் பழக்கப்பட்டவர்கள் என்பதால் வேடுவர் என அழைக்கப்பட்டாலும், அன்மையக் காலங்களாக சாதாரண மனித வாழ்க்கை முறைக்கு தம்மை மாற்றிக்கொண்டு இலங்கையில் வாழும் ஏனைய சமுதாயத்தினரைப் போன்று வாழும் நிலைக்கு மாறி வருகின்றனர். இருப்பினும் தற்போதும் காட்டு வாழ்க்கைக்கே பழக்கப்பட்டவர்களாக வேடுவராக வாழ்வோரும் உள்ளனர் எனும் செய்திகளும் உள்ளன.

## பேசும் மொழி

தற்போது இலங்கையில் வாழும் இனங்களுள் ஆதிக் குடிகளாகக் கருதப்படுபவர்கள் இவர்களாகும். சிங்களவர்கள் இவர்களை வேடுவர் என்னும் பொருள்பட "வெத்தா" எனப் பெயரிட்டு அழைத்தாலும், இவர்கள் தங்களை "வன்னியலா எத்தோ" என்றே குறிப்பிட்டுக் கொள்கின்றனர். இதன் பொருள் "காட்டைச் சேர்ந்தவர்கள்" அல்லது "காட்டில் வாழ்பவர்கள்" அல்லது "காட்டிலுள்ள மக்கள்" என்பதாகும். நாட்டின் கிழக்கு மற்றும் தென்கிழக்குப் பகுதிகளிலுள்ள காடுகளில் இவர்கள் காணப்படுகின்றார்கள்.

(இன்னும் நடுவோம்)

செந்தூரன்

சிறுவர் உரிமைகளைப் பாதுகாப்போம்
குற்றங்கள் நிகழும் பொழுதில் அழையுங்கள் தொலைபேசி எண்
1929

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முரசின் உலக வலம்

## அமெரிக்காவில் 10 வருடங்களுக்கு முன் தொலைந்த 3 யுவதிகள் ஒஹியோ மாநிலத்தில் மீட்பு

அமெரிக்காவின் ஒஹியோ மாநிலத்தில் கிளேவ்லாந்த் எனும் இடத்திலுள்ள வீட்டிலிருந்து மீட்கப்பட்ட இவ் யுவதிகள் மூவரும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர்களது உடல் நலம் நல்ல நிலையில் உள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் அமெரிக்காவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அமண்டா பெரி, கினா டிஜீஸஸ், மெசெல் நைட் ஆகியோரே கடத்தப்பட்ட யுவதிகளாவர்

அமண்டா 2003 ஆம் ஆண்டில் தனது 16 ஆவது வயதிலும், கினா 2004 ஆம் ஆண்டு தனது 14 ஆவது வயதிலும், மிசெல் 2002 ஆம் ஆண்டில் தனது 20 வயதிலும் கடத்தப்பட்டனர்.

மேற்கு கிளேவ்லாண்டில் சேமர் ஒழுங்கையிலிருந்த வீட்டின் வாசலில் பெண்ணொருவர் உதவி கோரி கூச்சலிடும் சத்தத்தை கேட்டு அயலவர் ஒருவர் பொலிஸாரிடம் செய்த முறைப்பாட்டையடுத்தே, இந்த 3 யுவதிகளும் மீட்கப்பட்டுள்ளனர்.

அமண்டா பெரியே தாம் சிறைவைக்கப்பட்டிருந்த வீட்டின் முன்வாசலருகே வந்து உதவி கேட்டு கூச்சலிட்டுள்ளார்.

மேற்படி மூவரையும் கடத்திய குற்றச்சாட்டில் 3 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் மூவரும் 50 வயதுக்கு மேற்பட்டவர்கள். மூன்று பெண்களில் ஒருவருக்கு குழந்தையொன்றும் உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

## மடோனாவின் ஓவியங்கள் 7.2 மில்லியன் டொலருக்கு ஏலம்

பொப் இசை உலகில் பெயர் பெற்று விளங்கும் மடோனா, பெண்கள் கல்வியிலும் ஆர்வம் கொண்டு ரே ஆப் லைட் என்ற தொண்டு நிறுவனத்தை ஆரம்பித்துள்ளார். மத்தியக் கிழக்கு நாடுகள் மற்றும் தெற்கு ஆசிய நாடுகளில் உள்ள பெண்களின் கல்விக்கு இவர் பெரிதும் உதவி செய்து வருகின்றார். கடந்த 1990ம் ஆண்டு நடைபெற்ற ஒரு ஏலத்தில் மடோனா, பிரான்ஸ் நாட்டு ஓவியரான பெர்னாண்ட் லெகரின் ஓவியம் ஒன்றை 3.4 மில்லியன் டொலருக்கு வாங்கியிருந்தார்.

கடந்த 1921ம் ஆண்டு வரையப்பட்ட, கியூபிஸ்ட் ஆர்ட் என்ற வகையைச் சேர்ந்த அந்த ஓவியத்தில் மூன்று பெண்களின் உருவம் சதுரங்கள், வட்டங்கள் போன்ற வடிவங்களில் வரையப்பட்டிருந்தது.

கடந்த செவ்வாய்க் கிழமை இந்த ஓவியத்தை 7.2 மில்லியன் டொலருக்கு ஏலம் விட்டுள்ளனர். இந்தத் தொகை அவரது தொண்டு நிறுவனத்தின் மூலம் பெண்களின் கல்விக்காக செலவிடப்படும் என்று அறிவித்துள்ளார். மேலும் இதற்குத் துணை புரிந்த அனைவருக்கும், இணையதளத்தின் மூலம் மடோனா நன்றி தெரிவித்துள்ளார்.

## தலாய்லாமா மனக்கவலையில்

உலகிலேயே புத்த மதத்தைப் பின்பற்றும் நாடுகளில் குறிப்பிடத்தக்கது மியான்மர் ஆகும். ஆயினும், அந்நாட்டின் 60 மில்லியன் மக்கள் தொகையில் 5 சதவீதத்தினர் முஸ்லிம் மக்களாவர் முக்கிய நகரங்களான யாங்கூன், மாண்டலே தவிர நாட்டின் பல இடங்களிலும் முஸ்லிம் இன மக்கள் பெருவாரியான அளவில் வசித்து வருகின்றனர். கடந்த மார்ச் 20ஆம் தேதியன்று, மேக்திலா என்ற இடத்தில், புத்தமத விற்பனையாளர்களுக்கும், முஸ்லிம் வியாபாரி ஒருவருக்கும் ஏற்பட்ட தகராறு, இனக் கலவரமாக மாறி, 42 பேரின் சாவுக்கும் காரணமாக அமைந்தது.

இது மேலும் 10 நகரங்களுக்கு மேல் பரவியது. 969 இயக்கம் என்று புத்தரின் கோட்பாடுகளைக் குறிக்கும் எண்களைத் தங்கள் இயக்கத்திற்கு வைத்துக் கொண்ட புத்த மதத்தினர், அதனை முஸ்லிம் மக்களுக்கு எதிரான தீவிரவாத செயல்களுக்குப் பயன்படுத்துகின்றனர்.

மேலும், முஸ்லிம்களின் வீடுகள், கடைகள் மற்றும் மசூதிகள் அடித்து நொறுக்கப்பட்டுள்ளன. அவர்கள் நண்பர்கள் மற்றும் உறவினர் வீடுகளிலோ, அல்லது அகதிகள் முகாம்களிலோ தஞ்சம் புகுந்துள்ளனர் இந்நிலையில், அமெரிக்காவில் சுற்றுப்பயணம் செய்து வரும் புத்தமத குரு தலாய் லாமா மேரிலேண்ட் பல்கலைக்கழகத்தில் உரையாற்றினார். அப்போது அவர் பேசியதாவது..

மியான்மரில் நடைபெற்று வரும் கலவரம் அரசியல் ரீதியானது மத ரீதியானது அல்ல.மியான்மரில் நடைபெற்று வரும் வன்முறைகள் நினைத்து பார்க்க முடியாதது. மிகவும் கவலை அளிக்கக்கூடியதுதற்போது புத்த துறவிகள் கூட மசூதிகள் மீது தாக்குதல் நடத்துவது வருத்தம் அளிப்பதாக உள்ளது. மத மோதல்கள் மற்றும் வன்முறையற்ற புதிய உலகை உருவாக்க மாணவ சமுதாயம் முன்வர வேண்டும் என்று அவர் பேசினார்.

## உண்மையான கடல் கன்னியைப் பார்த்து இருக்கின்றீர்களா?

இவரின் பெயர் ஹன்னா ஃப்ராசர். வயது 36. சுழியோடும் நிபுணர். மோடல் அழகியான ஆஸ்திரேலியாவை சேர்ந்தவர். மூன்றாவது வயதில் இருந்தே கடல் கன்னியாக சுயம் உருவகித்துக் கொண்டார். ஒன்பதாவது வயதில் பிளாஸ்டிக் மூலப் பொருளில் வால் ஒன்றை சரிப்படுத்தினர். கடல் கன்னியை முன்னிறுத்தி எடுக்கப்பட்ட டெரில் ஹன்னா (Daryl Hannah) என்கிற திரைப்படம்தான் இவரை நிஜ வாழ்க்கையில் கடல் கன்னி ஆக தூண்டியது. இவர் சிறுவயதில் இருந்தே சுழியோடுதல், மூச்சை அடக்குதல் போன்ற பயிற்சிகளை வீட்டு தடாகத்தில் மேற்கொண்டார்.



2002 ஆம் ஆண்டு புதிய வால் ஒன்றை தயாரித்தார். இது முன்னைய வாலைக் காட்டிலும் நீளமானது. அத்துடன் பழைய வாலின் பரிணாமமாக அமைந்தது. கூடுதல் வசதிகளை கொண்டிருந்தது. பிளாஸ்டிக் பூமரங், பிளிப்பர்கள், இரு கொக்கிகள் போன்றவற்றை பயன்படுத்தி அங்கி உருவாக்கப்பட்டது. கொக்கிகளுக்குள் குழாய் ரேப்புகள் ஏராளம் நிறுவப்பட்டு இருந்தன. இவர் கடல் வாழ் உயிரினங்களுடன் இணைந்து ஹவாய் சமுத்திரங்களில் அநேகமாக நீந்தி வருகின்றார்.

## ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சைக்கான பயிற்சிகள் - 14

பிரதீபா

1. புத்தகம் என்பதுடன் நெருங்கிய தொடர்புடைய சொற் கூட்டத்தை தெரிவு செய்க.
   1. விளையாட்டு, எழுத்து, சொற்கள் 2. பக்கம், பறக்கும், சொற்கள்
   3. அறிவு, சொற்கள், பாடங்கள்
2. எனது அருகில் இருப்பவர் எனது அம்மா. ஆனால் நான் அவரின் மகன் அல்ல. என்றால் நான் யார்?
   1. சிறுவன் 2. மகள் 3. ஒருவர்
3. நான் கடித்தாலும் கடிபட மாட்டேன். பிடித்தாலும் பிடி பட மாட்டேன். ஆனால் கண்ணில் காண முடியும். நான் யார்?
   1. காற்று 2. தண்ணீர் 3. கல்
4. பாம்பும் கீரியும் போல என்பதன் பொருள்
   1. ஒற்றுமை 2. பொறுமை 3. மிருகம்

பின்வரும் பாடலை வாசித்து கீழுள்ள இரு வினாக்களுக்கு விடையளிக்குக.

பார்க்க அழகு விசிறி
பனை ஓலை விசிறி
வெப்பம் போக்கும் விசிறி
விரும்பித் தேடும் விசிறி

5. பனை ஓலை விசிறி எதனைப் போக்க உதவுகின்றது?
   1. அழகை 2. குளிரை 3. வெப்பத்தை
6. விரும்பித் தேடுவது எதனை
   1. பனை ஓலையை 2. பனை ஓலை விசிறியை
   3. அழகு விசிறியை
7. கீழ்வரும் பாடலின் சரியான ஒழுங்குவரிசையைத் தெரிவு செய்க.
   அ. சொட்டுதம்மா எச்சிலும்
   ஆ. துட்டுக் கெங்கே போவது
   இ. ரொட்டி என்று சொன்னதும்
   ஈ. மட்டில்லாத ஆசைதான்
   1. ஆ, அ, ஈ, இ 2. இ, ஈ, அ,ஆ 3. அ, இ, ஆ, ஈ
8. இரண்டு நாக்கினைக் கொண்ட பிராணி எது?
   1. உடும்பு 2. தவளை 3. முதலை
9. நீர் அருந்தாமல் வாழும் பிராணி எது?
   1. பாம்பு 2. பல்லி 3. உடும்பு
10. "பச்சைக் கம்பளம் விரித்தது போல் பசுமையாகக் காணப்பட்டது" எனும் வாக்கியத்தில் பச்சைக் கம்பளம் என்பது?
    1. உவமையணி 2. இரட்டைக்கிளவி 3. பயனிலை
11. உப்புப் பைக்கற் ஒன்றை வாங்கும் போது அவ்வுறையில் இவ்வாறான குறியீடு காணப்பட்டால், இக்குறியீடு குறிப்பது?



    1. ஈரலிப்பு உள்ள இடத்தில் வைக்க வேண்டாம்.
    2. குழாய் நீரைச் சுத்தமாக பயன்படுத்துக.
    3. உப்பை கழுவாமல் பயன்படுத்துக.
12. "புத்திக் கூர்மையற்ற ஒருவருக்கு உயர் பதவி கிடைத்தால் அவர் இறுமாப்புக் கொள்வது" இதனைக் கூறும் பழமொழி எது?
    1. உயர, உயர பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகுமா.
    2. அர்ப்பனுக்கு வாழ்வு வந்தால் அர்த்த ராத்திரியில் குடை பிடிப்பான்.
    3. வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்.
13. காலையிலும், நண்பகலிலும் கடிக்கும் நுளம்பின் பெயர் என்ன?
    1. கியுலக்ஸ் 2. ஈஸ்ட், ஈஜிப்டஸ் 3. அனோபிலிஸ்
14. மின்னை அளக்கும் கருவியின் பெயர் என்ன?
    1. அம்பியர்மானி 2. மின் அளப்பான் 3. மின்மானி
15. எறும்பு ஒன்று 3 நிமிடத்தில் 9மீ தூரம் செல்லும் எனின், 5 நிமிடத்தில் எத்தனை மீற்றர் தூரம் செல்லும்?
    1. 12மீ 2. 15மீ 3. 27மீ
16. பரிசுப் பொதியொன்றில் ரூபா 16.25 பெறுமதியான 15 அப்பியாசக் கொப்பிகள் வீதம் 10 பொதிகள் தயாரிக்கப்பட்டன. எனின், அப்பொதிகளின் மொத்த பெறுமதி யாது? 1. ரூபா 243.75 2. ரூபா 2437.50 3. ரூபா 162.50
17. ஒருவர் 60கி.மீ தூரமுடைய ஓர் இடத்திற்குச் செல்வதற்கு 1 மணித்தியாலத்திற்கு 40கி.மீ எனும் வேகத்தில் செல்லக்கூடிய மோட்டார் சைக்கிளில் சென்றால், அவர் இத்தூரத்தை சென்றடைய எடுத்திருக்கக் கூடிய நேரம் எவ்வளவு?
    1. 2 மணித்தியாலங்கள் 2. 1.3 மணித்தியாலங்கள்
    3. 90 நிமிடங்கள்
18. ரூபா 164 பெறுமதியுள்ள பொருட்களை வாங்கிய தியானா ரூபா 200 இனை கொடுத்தாள். வியாபாரி அவளிடமிருந்து இன்னும் 14 ரூபாவைப் பெற்றுக்கொண்டு மிகுதிப் பணத்தைக் கொடுத்தார். அவர் கொடுத்த மிகுதிப் பணம் எத்தனை ரூபாய்?
    1. ரூபா 50 2. ரூபா 22 3. ரூபா 64

பெயர்: ....................................................

முகவரி: ....................................................

....................................................

....................................................

பாடசாலை: ....................................................

## தரம் ஐந்து மாணவர்களுக்கான புலமைப் பரிசிற் போட்டி

மேலுள்ள கேள்விகளுக்கான சரியான விடைகளை குறித்து அனுப்பி வாராந்தம் பரிசில்களை வெல்லுங்கள்.

மேலுள்ள கேள்விப் பகுதியை நிரப்பி வெட்டி அதனை மலைமுரசு, இல 159 கடல் முக வீதி திருக்கோணமலை என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள். வாராந்தம் பரிசுகளை வெல்லுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மும்முனை அழுத்தங்களில் முஸ்லிம் காங்கிரஸ்

மாயன்

நாட்டில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் நிகழ்வுகளால் மும்முனை அழுத்தங்களை எதிர்கொண்டுள்ளது முஸ்லிம் காங்கிரஸ்.

முதலாவது முனையைத் திறந்துள்ளது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு.

அண்மையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயலாளர் மாவை சேனாதிராசா அவர்கள் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியினை நோக்கி வெளிப்படையான அழைப்பொன்றை விட்டிருந்தார்.

வடமாகாணத் தேர்தல் களத்தில் தமிழத் தேசியக் கூட்டமைப்புடன் அணிசேர வருமாறு விடுக்கப்பட்ட அழைப்பாக இருந்தது அவரது அழைப்பு.

அரச பங்காளிக் கட்சியாக இயங்கிவரும் முஸ்லிம் காங்கிரஸ் கிழக்கின் மாகாணத் தேர்தல் அறிவிக்கப்பட்டபோது ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புடன் போட்டியிடாது தனியாகப் போட்டியிட முடிவெடுத்திருந்தது. அம் முடிவை கிழக்கு மாகாண முஸ்லிம்கள் உணர்ச்சிபூர்வமான முடிவாகக் கருதி தமது தனித்தன்மை காப்பாற்றப்பட்டதாகவும் உணர்ந்திருந்த கணங்களாகக் கழிந்தது.

தேர்தலின் பின் எந்தவொரு கட்சியும் அல்லது கூட்டமைப்பும் தனிப் பெரும்பான்மையைப் பெறாததால் கிழக்கில் ஆட்சியமைப்பதற்கு இரு கட்சிகள் இணைய வேண்டிய நிலையேற்பட்ட போது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் திரு. சம்பந்தன் முஸ்லிம் காங்கிரஸை நோக்கி வெளிப்படையான அழைப்பொன்றை விட்டிருந்தார்.

அவ் அழைப்பானது தமிழ்த்தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து கிழக்கில் ஆட்சியமைக்க முஸ்லிம் காங்கிரஸ் இணையுமாயின் கிழக்கின் முதலமைச்சர் பதவியை விட்டுத்தரத் தயாராக இருப்பதாக அவர் அறிவித்திருந்தார்.

அப்போதைய காகட்டத்தில் ஆளும் ஐக்கிய சுதந்திரக் கூட்டமைப்பு கிழக்கில் ஆட்சியைக் கைப்பற்ற வேண்டிய இக்கட்டான சூழலை எதிர்நோக்கியிருந்தது. ஏனெனில் திவிநெகும சட்ட மூலத்தை நிறைவேற்றிக்கொள்ள வேண்டுமாயின் அனைத்து மாகாண சபைகளிலும் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் ஆட்சி நிறுவப்பட வேண்டிய தேவை காணப்பட்டது.

இதனால் சம்பந்தன் வழங்கிய முதலமைச்சர் பதவியை விட பெரிய விடயங்கள் சிலவற்றை முஸ்லிம் காங்கிரஸிற்கு விட்டுத் தர ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு தயாரானது அதன் பால் சில பல அமைச்சர் பதவிகளும் பிரதி அமைச்சர் பதவிகளும் பேரம் பேசம்பட ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புடன் அணி சேர்ந்தது முஸ்லிம் காங்கிரஸ்.

பேரம் பேசும் வலுவை இச் சந்தர்ப்பத்தில் முஸ்லிம் காங்கிரஸ் அதிகரித்துக் கொண்டமைக்கான காரணங்களாக சம்பந்தனின் வெளிப்படையான அறிவிப்பும், திவிநெகும சட்ட மூலமும் காரணமாயிருந்தன.

ஆனால் அதன் பின்னர் நாட்டில் முஸ்லிம்களுக்கு எதிராக நிகழ்ந்த பல அழுத்தங்களால் முஸ்லிம் காங்கிரஸின் நிலை இருதலைக் கொள்ளி எறும்பாகப் போயுள்ளது.

இந் நிலையில் மாவை சேனாதிராசாவின் வெளிப்படையான வேண்டுகோளை ஏற்றுக்கொள்வதா? இல்லையா? என்பதை தனது பேரம் பேசும் ஆற்றலைக் கொண்டு தீர்மானிக்க முடியாத நிலைக்கு அக் கட்சி தள்ளப்பட்டுள்ளது.

ஏனெனில் வட மாகாண சபையின் அதிகாரத்தைக் கைப்பற்ற ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு விரும்பினாலும் அதனைத்-தனியாக முஸ்லிம் காங்கிரசுடன் இணைவதால் மட்டும் மேற்கொள்ளக் கூடிய அளவுக்கு போதுமான ஆசனங்களை வட மாகாண சபைத் தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸ் கைப்பற்றப் போவதில்லை. இதனால்-தான் மாவையின் அழைப்பு முஸ்லிம் காங்கிரசின் மீது ஓர் அழுத்தத்தைப் பிரயோகித்துள்ளது எனலாம்.

இரண்டாவது அழுத்தம் யாதெனில் புதிய பலத்துடன் உருவாகி வரும் அசாத் சாலியின் அரசியல் மலர்வாகும்.



முஸ்லிம்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுவரும் இனவாத அமைப்புக்களின் செயற்பாடுகளுக்கு எதிராக குரல்கொடுக்க முனைந்த ''பயங்கரவாதத்தைத் தூண்டும் வகையில் பேசினார்'' என்ற குற்றச்சாட்டினால் 90 நாட்கள் தடுப்பிலுள்ள அவருக்கான ஆதரவு மெல்ல மெல்லப் பெருகி வருகின்றமை முஸ்லிம் காங்கிரஸ் மீது அழுத்தத்தைப் பிரயோகித்து வருகின்றது.

நீதி அமைச்சராக முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் இருக்கின்ற போதும் அசாத் சாலியை காவல்த்துறைத் தடுப்பிலிருந்து வீட்டுக் காவலுக்கேனும் மாற்ற முடியாத கையறு நிலையில் அவர் இருப்பதால் முஸ்லிம் மக்கள் தமது நிலைமைக் கவலையுடன் எடை போடத் தொடங்கியுள்ளனர்.

அத்துடன் அசாத் சாலி மீது சேறு பூசும் நடவடிக்கையொன்றை முஸ்லிம்களையயும் பிரித்தாள



நினைக்கும் அமைப்பொன்று ஆரம்பித்திருப்பதாகத் தெரிகின்றது.

அரசுடன் இணைந்திருந்த அசாத் சாலி மட்டும் ஏன் முஸ்லிம்-களுக்கு எதிரான நடவடிக்கைகளுக்காக இத்தகைத் தொனியில் குரல்கொடுக்க வேண்டும் என்ற சந்தேகத்தை உருவாக்கி அச் சந்தேகத்திற்கான முடிவாக அவர் இடைவெளியாகவுள்ள முஸ்லிம்களின் ஏகபோகத் தலைமைத்-துவத்திற்காக ஆடும் நாடகமே இப்போது நிகழ்பவை என்ற கருத்தையும் மக்களிடையே பரப்பி வருகின்றார்கள்.

எவ்வாறிருப்பினும் அசாத் சாலியின் மீது முஸ்லிம் மக்களின் கவனம் மெதுவாகத் திரும்பி வருகின்றமையானது முஸ்லிம் காங்கிரஸ் மீதான அழுத்தமாக உருவாகியுள்ளது. அத்துடன் உள்நாட்டில் மட்டுமன்றி வெளி-நாடுகளிலும் அசாத் சாலியின் விவகாரம் ஓர் பூதாகரப் பிரச்சனையாக மாறியுள்ளது. அதற்குக் களம் அமைப்பவை இலங்கையின் மனித உரிமைகள் தொடர்பாக அவதானித்துக் கொண்டிருக்கும் அமைப்புக்களும் நாடுகளுமே!

உதாரணமாக மனிதவுரிமைச் சபை அசாத் சாலியின் விடுதலையை வேண்டி கையெழுத்து வேட்டையை ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத் தக்கதாகும். இவற்றால் அயல் நாடுகளிலும் அசாத் சாலியின் மதிப்பு உயர்வதுடன் அவரது எதிர்கால அரசியல் நலன்களுக்கு ஓர் அடித்தளமாக இவை அமைந்துவிடும். அதனால் இவை யாவும் முஸ்லிம் காங்கிரஸ்சிற்குத் தலையிடியாகவே அமைந்திருக்கின்றன.

மூன்றாவது முனை யாதேனில் அரசு வடமாகாண சபைத் தேர்தல் தொடர்பாக வெளியிட்ட கருத்தாகும். கடந்த வாரம் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஷில் ராசபக்ச ஈபிடிபி யுடன் இணைந்தே வடமாகாணத் தேர்தலில் தாம் போட்டியிடவுள்ளதாக மேற்கொண்ட அறிவிப்பினால் வடமாகாணத் தேர்தலில் முஸ்லிம் காங்கிரசுடன் கூட்டு இல்லை என்ற உட்கிடை அறிவிப்பாக இதனைக் கொள்ளலாமா என்ற கேள்வி முஸ்லிம் காங்கிரசுக்கு எழுந்துள்ளது.

அவ்வாறு அரசு தம்முடன் கூட்டமைக்காது போனால் யாருடன் இறுதியில் இணைவது என்பதில் இழுபறி நிலையொன்றை முஸ்லிம்



காங்கிரஸ் எதிர்கொள்ளும்.

தமிழத் தேசியக் கூட்டமைப்-புடன் இணைந்தால் அவர்களுடன் வடக்கில் மட்டும் இணைந்திருப்பது, ஆனால் கிழக்கில் பிரிந்திருப்பது என்பது அசூசையாக இரு கட்சிக்கு-மேயிருக்கும். அரசுடன் இணைந்தால் எவ்வித பேரம் பேசும் வலுவும் அங்கு இருக்கப் போவதில்லை என்பதுடன் மேலும் முஸ்லிம் சமூகத்தின் செல்வாக்கை இழக்க வேண்டியும் இருக்கும். ஏனெனில் இப் பத்தியை எழுதிக் கொண்டிருக்கும் போது நீதி அமைச்சர் வெளியிட்ட அறிக்கை-யொன்றின் தலைப்பு "சட்ட ஆட்சி கேள்விக்குறியான தருணத்தில் நீதி அமைச்சராகப் பதவி வகிக்கின்றேன்" என்று ஹக்கீமின் வேதனையை வெளிக்காட்டிக் கொண்டுள்ளது.

இந்நிலையில் தமிழத் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் திரு. சுமந்திரன் அசாத் சாலிக்காக நீதிமன்றத்திற்குச் செல்லத் தயாராயிருக்கும் இந் நிலையில் அசாத் சாலி தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் வடமாகாண சபைத் தேர்தலிற் கைகோர்ப்பாராயின் முஸ்லிம் காங்கிரஸ் அங்கு செல்லாக் காசாகி விடும் வாய்ப்பும் உள்ளது.

எனவே தற்போது மும்முனை அழுத்தங்களில் இருந்து தனது தனித்துவத்தைக் காத்துக்கொண்டு முஸ்லிம் காங்கிரஸ் எவ்வாறு மீண்டு வரப் போகின்றதென்பதை அக் கட்சியின் தலைவரின் சமயோசித முடிவுகளும், அக் கட்சியின் புறச்சூழலுமே தீர்மானிக்கப் போகின்றன.

## மாயுமென் கனவுகள்

நேற்றைய அந்தியில்தான் ஒரு
நீண்ட
மனமகிழ்ச்சியில்
தள்ளிவிட்டிருந்தாய்.
அகால மழையெய்து நனைத்தது.
விடாமல் பெய்து கொண்டிருக்கும்
என் பேச்சுக்கள்.
இத்தனைக் காலம் தேக்கி வைத்த
மறைத்து வைத்த கண்களில்
தேங்கி கிடந்த
துளிகளைகளையும்
நீராய் பெய்கின்றாய்.
மழை தொட்ட
இடமெல்லாம் ஈரமாகி,
தெப்பமாகி.....
குளிர்கின்றது.
உன் கண்களின் தெளிவைக்
கண்டு
ஓமோன் மாற்றத்தில்
நோயாளியானேன்.
இது ஓர் அற்புத சங்கமம்
மனமும்,மனமும் உரசிய
நிலையில்
இருவரும்.
நீ என் பக்கத்தில். நானோ,
சோலைகளையும்,
கானகங்களையும், கடலையும்
தாண்டி பறந்து பறந்து
களைத்தேவிட்டேன்.
தாளாத பொழுதில் மின்னல்களை
இறக்குகிறாய்.
இசை, காதல், காமம், நட்பென்று
உன் பேச்சுக்கள்
தொடரட்டும்.
வண்ணத்துப் பூச்சியாய் என்
அறையெங்கும்
பறக்கும் உன் வாசம்.
உறையும் மௌன இடைவெளியில்
உன் பார்வை
நயாக்ராவாய் நகர்கின்றது.
மனக்காடெங்கும் உன் கால்தடம்
உடலெங்கும்
உன் வாசம்.
என் பற்றைகாடுகளில் எரிந்துக்
கொண்டிருக்கின்றது
உன் தேடல்.

எஸ்தர் விஜித் நந்தகுமார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மே மாதத்தில்..

தொடர்பாக இரண்டு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப் படவேண்டியுள்ளது. முதலாவது ஒப்பந்தம் இலங்கை மின்சார சபைக்கும் திருகோணமலை மின்வலுக் கம்பனிக்கும் இடையே நிகழவுள்ளது. இவ் ஒப்பந்தமானது திருகோணமலை மின்வலுக் கம்பனியிடமிருந்து மின்சாரத்தை இலங்கை மின்சாரசபை கொள்வனவு செய்யும் ஒப்பந்தமாகும்.

இரண்டாவது ஒப்பந்தமானது திருகோணமலை மின்வலுக் கம்பனிக்கும் இலங்கை அரசிற்கும் இடையே மின்உற்பத்தித் திட்டத்தைச் செயல்படுத்தும் ஒப்பந்தமாகும்.

2017ம் ஆண்டில் சுமார் 500 மெகா வோட்டுக்கள் அனல் மின்சாரத்தை உற்பத்தி செய்து இலங்கையின் மின்வலு விநியோகத்தில் இணைக்கும் வகையில் சம்பூர் மின்நிலையப் பணிகள் துரித கதியில் முன்னெடுக்கப்படும் எனத் தெரியவருகின்றது.

## ஊழியர் போராட்டம்..

இந்த நிலையில் பணி நீக்கம் செய்யப்பட்டவர்களை மீளச் சேவையில் இணைத்துக் கொள்வதாக கனிப்பொருள் மணல் கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் நிஸான் குணசேகர அறிவித்துள்ளார்.

இதனை தொடர்ந்தே உண்ணாவிரத போராட்டம் முடிவிற்கு வந்துள்ளது.

## ஆசியக் கடற்படைக்கு..

இப்பயிற்சி நடை பெறவுள்ளது.

இப் பயிற்சி நெறியில் ஆசிய நாடுகளான பங்களாதேஸ், சீனா, இந்தியா, பாகிஸ்தான், சீசெல்ஸ், மாலைதீவு ஆகிய நாடுகளின் கடற்படையினரும் அதிகாரிகளும் கலந்து கொண்டுள்ளனர்.

இப்பயிற்சி நெறியின் முக்கிய அறிவாகச் செயற்படுவது விடுதலைப் புலிகளின் தாக்குதல் திட்டங்களும் அதன் முறியடிப்புத் தந்திரோபாயங்களும் ஆகும்.

## ஆசிரியர் நியமனம்..

கூடிய புள்ளிகளைப் பெற்றவர்களுக்கு இந்த நியமனம் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண முதலமைச்சர் நஜீப் ஏ. மஜீத், மாகாண கல்வி அமைச்சர் விமலவீர திசாநாயக்க, சபை தவிசாளர் ஆரியவதி கலபதி மற்றும் மாகாண கல்வி பணிப்பாளர் ரீ.எம்.நிசாம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## பதவி ஏற்க விடாத..

நேர்முகப் பரீட்சை மூலம் நியமனம் செய்யப்பட்ட ஆமினா சலீம் என்னும் அதிபர் தனது கடமைகளைப் பொறுப்பேற்க இப் பாடசாலைக்குச் சென்ற போது அப் பாடசாலையின் தற்போதைய அதிபரான ஏ.ஏ. காதர் என்பவர் கடமைப் பொறுப்புக்களை வழங்க மறுத்துள்ளார்.

இதே வேளை குறித்த பிரச்சினை தொடர்பாக குச்சவெளி விவேகானந்தா மகா வித்தியாலய மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் இணைந்து கிழக்கு மாகாண கல்வி அலுவலகத்திற்கு முன்னால் ஆர்ப்பாட்டமொன்றிலும் ஈடுபட்டுள்ளனர். மேலும் கஷ்டப் பிரதேசமான தமது பகுதிக்கு ஆறுமாதகாலமாக அதிபர் இல்லாத நிலையில் கடந்த மூன்று மாதமாக சிறப்பாக பணியாற்றிய தமது அதிபரை இடமாற்றம் செய்ய வேண்டும் என்றும் 1C தரமுள்ள தமது பாடசாலைக்கு 2ம் தரத்தில் உள்ள அதிரை நியமித்தமைக்கான எதிர்ப்பையும் தமது பதாகைகள் மூலம் குறித்த ஆர்ப்பாட்டத்தில் மாணவர்கள் வெளிப்படுத்தியிருந்தனர்.

## மிகைப் போசாக்குனவை வழங்கியது ரோட்டறிக் கழகம்

பாட்டாளிபுரம் கிராமத்தில் போசாக்கு குறைந்த 50 குழந்தைகளுக்கு ரொட்டறி கழகத்தினால் மிகை போசாக்கு பிஸ்கட்டுக்கள் வழங்கி வைக்கப்பட்டள்ளது.

ஒவ்வொரு குழந்தைக்கும் நாளொன்றுக்கு 8 பிஸ்கட்கள் வீதம் உண்ணத்தக்கதாக 50 நாட்களுக்கு இவை வழங்கப்பட்டுள்ளது.

## வலது குறைந்தோரை மேம்படுத்தும் வலைப்பின்னல்

கிழக்கு மாகாணத்திலுள்ள வலது குறைந்தோரை உள்ளடக்கிய மேம்பாட்டுக் கல்வி (Inclusive Education) வழங்குதல் மற்றும் வலது குறைந்தோரை இலக்குக் குழுக்களாக கொண்ட அமைப்புக்களுக்கிடையிலான வலைப்பின்னலை ஏற்படுத்தல் போன்ற நோக்கத்திற்காக கிழக்குமாகாணத்தில் உள்ள வலது குறைந்தோருக்கு சேவை வழங்கும் அமைப்புக்களுக்கிடையிலான கூட்டம் அண்மையில் மட்டக்களப்பு மாவட்ட சமூக சேவைகள் உத்தியோகத்தர் காரியாலயத்தில் இடம் பெற்றது. குறித்த நிகழ்வில் கல்வி தொடர்பாக கலந்துரையாடப்பட்டதோடு இது தொடர்பான முதன்மை பயிற்றுவிப்பாளர்களுக்கான வதிவிட பயிற்சியினை வெளிநாட்டு வளவாளர்களினால் பயிற்சி வழங்குவதற்கும், வலது குறைந்தோரை இலக்குக் குழுக்களாக கொண்ட அமைப்புக்களுக்கிடையிலான வலைப்பின்னல் ஒன்றை இவர்கள் மூலமாக ஏற்படுத்துவதாகவும் தீர்மானிக்கப்பட்டது. Solidarite Laique நிறுவனத்தின் பரிந்துரை இணைப்பாளர் அப்பாஸ் ஹிதாயத்துள்ளாஹ்வின் ஏற்பாட்டில் அந்நிறுவன தேசிய இணைப்பாளர் ஏ.ஆர்.எம். ஸைபுள்ளாஹ்வின் தலைமையில் இடம் பெற்ற இக்கூட்டத்திற்கு பிரதம விருந்தினராக கிழக்குமாகாண சமூக சேவைகள் பணிப்பாளர் திரு. என். மணிவண்ணன், விசேட விருந்தினராக CBTD நிறுவனத்தின் பிரதம நிறைவேற்றுப் பணிப்பாளர் கித்சிரி தர்மப்பிரிய மற்றும் கிழக்கு மாகாண கல்வி பணியகத்தின் விசேட கல்வி இணைப்பாளர் எஸ். ஜனர்தன் இவர்களுடன் பங்காளர் நிறுவன பிரதி நிதிகள் அரச, அரச சார்பற்ற அமைப்புக்களின் பிரதி நிதிகளும் குறித்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

## கவிதை நூல் வெளியீடு

கவிஞரும் சட்டத்தரணியுமான கிண்ணியா சபறுல்லாஹ் எழுதிய "பிரதேச பரிசோதனை" எனும் கவிதை நூல் கடந்த ஞாயிற்றுக்கிழமை கிண்ணியா பொது நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

திருமலையின் சிரேஷ்ட சட்டத்தரணி ஆறுமுகம் ஜெகசோதி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் வரவேற்புரையை ஏ.எம்.எம். அலியும், நூல் ஆய்வுரையை எம்.எஸ். நியாஸும், விசேட உரையொன்றினை கிழக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் ஆரியவதி கலபதியும் நிகழ்த்தியிருந்தனர்.

## திருமலையில் காணி சுவீகரிப்பு..

மாவட்டக் காரியாலயத்தில் கடந்த வாரம் நடந்தேறியுள்ளது.

வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள மாவட்டங்கள் யாவற்றிலும் பல ஆயிரம் ஏக்கர் நிலத்தினை முப்படைகளின் பாவனைக்காக அரச கையகப்படுத்தி வரும் நிலையில் திருகோணமலை மாவட்டத்திலிருந்து மக்கள் குடியிருக்கும் நிலப்பரப்புக்கள் உட்பட இவ் எண்ணூறு ஏக்கர் காணி சுவீகரிக்கப்படவுள்ளது.

கடந்த வாரம் புல்மோட்டையில் உள்ள ஜின்னாபுரம் கிராம மக்கள் வீரகேசரி இணையத்தளத்திற்கு தெரிவித்துள்ள செய்தியொன்றில் கடற்படையினர் தங்களை பலவந்தமாக தமது வாழ்விடங்களிலிருந்து வெளியேற்றுவதற்கு கடும் முயற்சி எடுத்துவருவதாக தெரிவித்துள்ளனர்.

மேலும் அச்செய்திக் குறிப்பில் சுமார் இருபத்திரண்டு முஸ்லிம் குடும்பங்கள் 1988 முதல் வசிக்கும் இக் கிராமத்தில் 2010ம் ஆண்டில் அமைக்கப்பட்ட கடற்படை முகாமின் விஸ்த்தரிப்பிற்காகவே தமது குடியிருப்பு நிலங்களை கடற்படையினர் பலவந்தமாக அபகரித்துள்ளார்கள் என தெரிவித்துள்ளனர்.

இந் நிலச் சுவீகரிப்புத் திட்டத்தில் திருகோணமலை நகரை அண்டிய பிரதேசங்களில் சுமார் இருநூறு ஏக்கர் நிலப்பரப்பு கையகப் படுத்தப்படவுள்ளதாக தெரிகிறது.

## உலக பத்திரிகைச் சுதந்திர தினம்..

அதன்பிரகாரம் பத்திரிகை சுதந்திரத்தில் இலங்கை 162 ஆவது இடத்தில் இருக்கின்றது. . இந்த ஆண்டுக்கான அட்டவணையில் இந்தியாவுக்கு 140 ஆவது இடம் கிடைத்துள்ளது. 2002ம் ஆண்டிலிருந்து இந்தியா இப் பத்திரிகைச் சுதந்திரக் சுட்டெண்ணில் சரிவைச் சந்தித்து வருகின்றமை குறிப்பிடத் தக்கது. இந்தியாவில் கடந்த 2012ஆம் ஆண்டு மட்டும் பத்திரிகையாளர்கள் நால்வர் கொல்லப்பட்டுள்ளனர். அத்துடன் முக்கியமான தகவல் வலைப்பின்னல்களை இந்தியா தனது நாட்டினுள் தடைசெய்துள்ளமையும் இச் சரிவுகளுக்கு முக்கிய காரணிகளாக இனம் காணப்பட்டுள்ளன.

இந்த அட்டவணையில், பின்லாந்து முதல் இடத்தை பெற்றுள்ளது. அட்டவணையில் இங்கிலாந்து 29 ஆவது இடத்திலும், அமெரிக்கா 32ஆவது இடத்திலும் இருக்கின்றன. ரஸ்யா 148 ஆவது இடத்தை பிடித்துள்ளது. சீனா 173 ஆவது இடத்திலும், பாகிஸ்தான் 159 ஆவது இடத்திலும் உள்ளன. இப் பட்டியலில் 179 வது கடைசியிடத்தை எரித்திரியா பெற்றுள்ளது.

## திருமலை வைத்தியசாலைக்கு நவீன மருத்துவ உபகரணங்கள்

திருகோணமலை லயன்ஸ் கழகமும் ஹோல்சிம் நிறுவனமும் இணைந்து 3.5 மில்லியன் பெறுமதியான மருத்துவ உபகரணங்களை திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு வழங்கியுள்ளது. கிழக்கு மாகாண முதலமைச்சர் நஜீப் அப்துல் மஜீத் அவர்கள் மேற்படி உபகரணங்களை மருத்துவ அத்தியட்சகர் ஈ.ஜீ. ஞானகுணாளனிடம் கையளித்துள்ளார். இந் நிகழ்வில் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் புத்தசாசன பிரதி அமைச்சருமான எம்.கே.ஏ.டி.எஸ். குணவர்த்தன மற்றும் லயன்ஸ் கழக ஆளுனர் ஞானரஞ்சன் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர்.

## இனத் தொடர்புச் சபை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்

இனங்களுக்கிடையிலான சர்ச்சைகளை சுமுகமாக கையாள்வதற்கு இலங்கையில் இனத் தொடர்புச் சபை அமைக்கப்பட உள்ளதாவும் இது தொடர்பாக சனாதிபதியுடன் ஆலோசிக்க உள்ளதாகவும் நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான நோர்வே தூதுவர் கிறீட் லோச்சனிற்கும் நீதியமைச்சர் ரவூப் ஹக்கீமிற்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்பிலேயே அமைச்சர் இக்கருத்தை தெரிவித்துள்ளார். யுத்தம் முடிவடைந்து நாட்டில் சமாதானம் நிலவும் சூழ்நிலையில் இனங்களுக்கிடையிலான நல்லெண்ணத்தையும் புரிந்துணர்வையும் கட்டி எழுப்புவதன் முக்கியத்துவத்தையும், இனங்களுக்கிடையே ஏற்படும் விரிசல்களையும் குறைப்பதற்கும் இச்சபை உதவியாக இருக்கும் என்றும் தற்போதைய சூழ்நிலையில் இத்தகைய பொறிமுறையொன்று அவசியம் எனவும் குறித்த சந்திப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச் சந்திப்பில் கொழும்பிலுள்ள நோர்வே தூதுவராலய அதிகாரி விபெகி பிப்பி ஜி சொயேகார்ட் அமைச்சரின் சட்ட ஆலோசகர் மற்றும் இணைப்புச் செயலாளர் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

## வாகன உடற்பகுதிகளை அமைக்கச் செலுத்தப்படும் கட்டணங்கள் குறைக்கப்பட்டுள்ளது

டிமோ பட்டா போன்ற 1000 சீசீ ரக வாகனங்களுக்கு மேலதிகமாக அமைக்கப்படும் கூரைகளுக்கான உடல் பாகங்களுக்கான அறவிடப்பட்டு வந்த 25,000 ரூபா கட்டணம் 500 ரூபாவாக குறைக்கப்படுகிறது என போக்குவரத்து அமைச்சர் குமாரவெல்கம தெரிவித்தார். ஜனாதிபதியினதும், பொருளாதார அமைச்சரினதும் வேண்டுகோளுக்கு அமைய சுயதொழில் முயற்சியாளர்களின் நன்மை கருதி இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

"டிமோ பட்டா" மெக்ஸிமோ போன்ற வாகனங்களுக்கு சுயதொழில் முயற்சியாளர்கள் மேலதிகமாக கூரைகள், மூடிய கூரைகள் அமைப்பதுண்டு. இதற்கென மோட்டார் போக்குவரத்து திணைக்களத்துக்கு 25000 ரூபாவை மேலதிகமாக செலுத்த வேண்டும் இக்கட்டணம் இனிமேல் 500 ரூபாவாக குறைக்கப்படுகிறது.

அத்துடன் ஏலத்தில் எடுக்கப்படும் ஒரு வாகனத்தை ஒரு மாதத்தின் பின்னர் பதிவு செய்ய வேண்டும் என்ற நடைமுறை 6 மாதங்களின் பின்னர் பதிவு செய்யலாம் என்றும் மாற்றம் கொண்டுவரப்படுகிறது.

மோட்டார் சைக்கிள்களின் பதிவானது இறக்குமதி செய்த தினத்திலிருந்து பதிவு செய்ய வேண்டும் என்ற நடைமுறை விற்பனை செய்த நாட்களிலிருந்து 90 நாட்களின் பின்னர் பதிவு செய்யலாம் என்றும் மாற்றம் செய்யப்படுகிறது.

மோட்டார் சைக்கிள்கள் தவிர்ந்த கார் உள்ளிட்ட ஏனைய வாகன பதிவுகள் இறக்குமதி செய்யப்பட்ட தினத்திலிருந்து பதிவு செய்ய வேண்டும் என்ற நடைமுறை இறக்குமதி செய்து 90 நாட்களின் பின்னர் பதிவு செய்யலாம் என்று மாற்றம் செய்யப்படுகிறது என்றும் அமைச்சர் குமார வெல்கம குறிப்பிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## அறிந்துகொள்ளுங்கள்

- ஆசியாக் கண்டத்தின் மிகப்பழமையான பத்திரிக்கை மும்பை சமாச்சார்.
- இந்தியாவில் முதல் நினைவு நாணயம் நேருஜிக்கு 1964ல் வெளியிடப்பட்டது.
- டெஸ்ட் கிரிக்கெட்டில் 3000 ரன்களை இளவயதில் எடுத்தவர் டெண்டுல்கர்.
- ஷெர்லாக் ஹோம்ஸ் என்ற கதாப்பாத்திரம் தோன்றி 121 ஆண்டுகள் ஆகின்றன.
- 155 மில்லிமீட்டர் நீளமுள்ள அதி நவீன பீரங்கியை இந்தியா தயாரித்துள்ளது. இதன் பெயர் பீம் இடம் சென்னை ஆண்டு 1996.
- உலகின் முதல் கருத்தடை மாத்திரையின் பெயர் ஈனோவிட்.
- உலகிலேயே மிக அதிகமாக சைக்கிள் ஓட்டுபவர்கள் சீனர்கள்.
- உலகிலேயே மிகச்சிறிய குரங்கு இனத்தின் பெயர் “அலொசிபஸ்-டிரிகொடிஸ்”

## சாமர்தியமுள்ள வியாபாரி

ஓர் ஊரில் இராமன் என்ற பெரிய இரும்பு வியாபாரி இருந்தார். அவரிடம் நிறைய இரும்புக் கம்பிகள் இருந்தன. ஒரு சமயம் வியாபார நிமித்தம் அவசரமாக வெளியூர் செல்ல வேண்டியிருந்தது. திரும்பி வருவதற்கு பல மாதங்கள் ஆகும் எனத் தோன்றியது. அதனால் தன்னிடமுள்ள இரும்புக் கம்பிகளை தனது நண்பர் கோவிந்தன் என்பவனிடம் ஒப்படைத்துச் செல்ல எண்ணினார். உடனே கோவிந்தன் வீட்டிற்கு இராமன் சென்றார். அவருடன் வெகுநேரம் உரையாடிய பிறகு தனது இரும்புக் கம்பிகளை அவரிடம் விட்டுச் செல்வதைப் பற்றிக் கூறினார். கோவிந்தனும் அதற்குச் சம்மதித்தார். கோவிந்தன் இராமனிடம், “அக்கம்பிகளை நான் ஜாக்கிரதையாகக் காப்பாற்றி வைக்கிறேன். தாங்கள் எப்பொழுது வந்தாலும் அவைகளைத் திரும்பப் பெற்றுக்கொள்ளலாம்” என்றார். உடனே இராமன் தன்னிடமிருந்த எல்லா இரும்புக் கம்பிகளையும் வண்டியில் ஏற்றி கோவிந்தன் வீட்டிற்கு எடுத்துச் சென்று, அவரிடம் ஒப்படைத்தார். சில நாட்கள் கழித்து இராமன் வெளியூர் பயணத்தைத் துவக்கினார். பல ஊர்களுக்குச் சென்று அவர் ஊர் திரும்ப மூன்று மாதங்களாகின. ஊர் திரும்பியதும் நேரே கோவிந்தனின் வீட்டிற்குச் சென்றார். தனது இரும்புக் கம்பிகளை எடுத்துச் செல்ல அனுமதி கேட்டார். இதைக் கேட்ட கோவிந்தன் மிக்க வருத்தத்துடன் இராமனிடம், “ஐயா! நான் என்ன செய்வேன்? தங்களது இரும்புக் கம்பிகள் முழுவதையும் எலிகள் தின்று விட்டன. தங்களுக்கு நான் எவ்வாறு கம்பிகளைத் திரும்பக் கொடுப்பேன்” என்று கூறினார்.


புத்திக் கூர்மையுள்ள இராமன் ஒன்றும் பதில் கூறாமல் வருத்தத்துடன் வீடு திரும்பினார். சில நாட்கள் கழித்து, ஒரு நாள் மாலையில், கடைவீதியில் கோவிந்தனது ஏழு வயது மகன் தனியே இருப்பதைக் கண்டார். அவனுக்குத் தின்பண்டங்களை வாங்கிக் கொடுத்து, அவனைத் தன் வீட்டிற்கு அழைத்துச் சென்றார். கோவிந்தனிடம் அவனை அனுப்பவில்லை. இரவு வெகு நேரம் ஆகியும் மகன் வீடு திரும்பாததைக் கண்டு பல இடங்களில் விசாரித்தார். கடைசியில் இராமனைக் கண்டு தனது மகனைப் பற்றி விசாரித்தார். அதற்கு இராமன், “நான் கடை வீதியில் நடந்து வந்து கொண்டிருந்த பொழுது தங்கள் மகனை பெரிய பருந்து ஒன்று, கவ்வி எடுத்துச் செல்வதைக் கண்டேன்” என்று கூறினார். இதனைக் கேட்ட கோவிந்தன் இராமனைப் பார்த்து கோபத்துடன் “என்ன ஐயா விளையாட்டு? குழந்தையைப் பருந்து எடுத்துச் செல்லுமா? தாங்கள் தான் எனது குழந்தையை மறைத்து வைத்திருக்கிறீர்கள். உடன் அவனை என்னிடம் ஒப்படையுங்கள்” என்று கூறினார். இது கேட்ட இராமன் சிறிதும் கலங்காமல் “ஐயா! இரும்புக் கம்பிகளை எலிகள் தின்னக் கூடிய ஊரில் குழந்தைகளைப் பருந்து எடுத்துச் செல்வதில் என்ன ஆச்சரியம்” என்று கூறினார். தான் செய்த தவறை உணர்ந்து உடன் மன்னிப்புக் கேட்டார். நாளை காலையிலேயே தங்களினது இரும்புகள் அனைத்தையும் தானே கொண்டு வந்து சேர்ப்பதாக வாக்களித்தார். கோவிந்தன், தான் செய்த தவறை உணர்ந்துவிட்டதால் இராமன் தானும் மன்னிப்புக் கோட்டுக்கொண்டு உடன் சென்று குழந்தையைத் தூக்கி வந்து கோவிந்தனிடம் கொடுத்தார். மறு நாள் காலையில் தான் கூறியது போலவே இராமனுடைய இரும்புகள் அனைத்தையும் அவரது வீட்டிற்கே கொண்டு சென்று ஒப்படைத்தார் கோவிந்தன. அதன் பின்னர் இருவரும் கை குலுக்கி மறுபடியும் முன் போல நண்பர்களாக வாழ்ந்தார்கள்.

### சராசரி மனிதனின் தகவல்கள்..

- சராசரி மனிதனின் குருதியின் அளவு - 5.5 லீ.
- உடலில் இருந்து வெளியேறும் சிறுநீரின் சராசரி அளவு - 1.5 லீ
- சராசரி மனிதன் ஒரு நாளில் அருந்த வேண்டிய நீரின் அளவு - 6 லீ
- மனித உடலில் உள்ள இரத்த நாளங்களின் மொத்த நீளம் - 100000 கிலோமீற்றர்
- மனித உடலில் மிகவும் குளிரான பகுதி - மூக்கு
- வியர்க்காத உறுப்பு - உதடு
- மனித உடலின் சிவப்பு அணுவின் சராசரி ஆயுட் காலம் - 120 நாட்கள்
- இறந்த மனிதனின் இதயத்தின் உயிர்த்துடிப்பு அடங்கு நேரம் - 20 நிமிடங்கள்
- மனித நகம் வளரும் வருட சராசரி அளவு - 12.5 அங்குலம்
- வியர்வைச் சுரப்பிகளின் எண்ணிக்கை - 200000

### சில பிராணிகள் எதிரிகளிடமிருந்து தப்புவதற்காக கையாளும் உத்திகள்

| | |
|---|---|
| பச்சோந்தி | - இடத்திற்கும் சூழலுக்கும் ஏற்ப தமது உடல் நிறத்தை மாற்றும். |
| முள்ளம்பன்றி | - உடம்பிலுள்ள முட்களைச் சிலிர்த்து நிற்கும். |
| பல்லி | - வாலை உடைத்து விட்டுத் தப்பி ஓடும். |
| ஆமை, நத்தை | - தமது ஓட்டுக்குள் உடலை மறைத்துக் கொள்ளும். |
| தேனீ, குளவி | - தமது கொடுக்கால் எதிரியைத் தாக்கும். |
| மர அட்டை | - தொட்டால் சுருண்டு கொள்ளும். |
| மின்மினிப் பூச்சி | - வெளிச்சத்தை விட்டு எதிரியைப் பயப்பட வைக்கும். |
| ஆடு, மான், மாடு | - கொம்புகளால் குத்தும். |




# அன்னையர் தினம் உருவான வரலாறு

ஒவ்வொரு வருடமும் மே மாதத்தின் இரண்டாவது ஞாயிற்றுக் கிழமையை அன்னையர் தினமாக பெரும்பாலான நாடுகளில் கொண்டாடப்படுகின்றது. வயிற்றில் எம்மை சுமந்த கணம் தொட்டு எம்மைப் பற்றிய கனவுகளோடும், கவலையோடும் கருணையும், அன்பும் கலந்து எமக்காகவே வாழத் துடிக்கும் அந்த ஆத்மாவை பெருமைப்படுத்தும் ஒரு நாளாக இந்த நாளை உலகம் முழுவதும் ஒவ்வொரு மகனும், ஒவ்வொரு மகளும் தமது தாய்மாருடன் பரிசுகளையும், வாழ்த்துகளையும் குவித்து தமது அன்பை வெளிப்படுத்திக் கொள்கிறார்கள்.

ஒவ்வொரு வருடமும் இணையத்தில் அன்னையர் தின வாழ்த்துகளை படிக்கும் போது அவற்றுக்கு சமனாக இந்த நாளை கட்டாயம் கொண்டாடத்தான் வேண்டுமா என்ற ஏளனங்களும், கிண்டல்களும் கலந்த பின்னூட்டங்களும் கருத்துப் பகிர்வுகளையும் படிக்க வேண்டிய சந்தர்ப்பங்கள் நேரும் போதெல்லாம் மனது வேதனைப்படும்.

ஒவ்வொரு நிகழ்வுகளும் வரலாறு ஆகாது. ஆனால் சில விசேடமான குறிப்பிட்ட நிகழ்வுகள் சம்பிரதாயங்களாக “ஏதோ ஒரு வரலாற்றின் சுவடுகளாகத் தான் எம்மோடு கூடவே வருகின்றன. அதே போல் அன்னையர் தினத்துக்கென்றும் பல காரணங்களும் வரலாறும் பண்டை காலந்தொட்டு இருக்கத் தான் செய்கின்றது. அந்த வரலாறுகளைப் பற்றித் தெரியாதவர்களுக்காகத் தான் இந்தக் கட்டுரை..!!

பண்டைக் காலங்களில் அன்னையர் தினம் என்பது பெண் கடவுள்களை அம்மாவாக போற்றிக் கொண்டாடப்பட்டிருக்கின்றன. உலகில் தோன்றிய எல்லா மதத்திலும் பெண் கடவுள் இன்றியமையாத ஒரு படைப்பாகியிருந்திருக்கிறது. ஏன் நமது இந்து சமயமே அதற்கு பெரிய ஒரு உதாரணமாக கொள்ளலாமே” இயற்கையையும், அனோமதேய சக்தியையும் பெண்ணின் வடிவாக போற்றியிருப்பது கண்கூடான விசயங்கள் நதியிலிருந்து விதி மகள் வரை பெண்ணின் வடிவம். பெண்ணைப் பெரும்பாலும் தாயின் வடிவாகவே போற்றினர்.

உலகில் அன்னையர் தின வரலாற்று சுவடுகளை தேடிக் கொண்டு போனால் பண்டைய எகிப்திய காலம் வரை அவை உங்களைக் கூட்டிச் செல்லும். பண்டைய காலங்களில் அன்னைக்கான மேன்மையையும் பெருமையையும் மானுட அன்னையரை விட அமானுஷ்யமாயிருந்த இயற்கை அன்னைக்கு அதிகம் முக்கியத்துவம் கொடுத்திருந்தனர் என்று சொல்லலாம். இந்த வகையில் பண்டைய எகிப்தியர் தான் அநேகமாக உலகில் முதல் அன்னையர் தினத்தைக் கொண்டாடியவர்கள் என சொல்லலாம். இவர்கள் ஐஸிஸ் என்ற பெண் கடவுளை மேன்மைப்படுத்தும் வகையில் இந்நாளைக் கொண்டாடினர். இந்த பெண் தெய்வமான ஐஸிஸ் (Mother of Hours) இயற்கை அன்னையாக போற்றப்பட்ட தெய்வமாகும். இந்தப் பெண் தெய்வமானது அடிமைகளுக்கும், தாழ்த்தப்பட்டோருக்கும், நோய்வாய்ப்பட்டோருக்கும், சிநேகமானவளாயும், ஏழை எளியோரின் பிராத்தனைகளை செவிமடுப்பவளாயும் நம்பப்பட்ட தெய்வமாகும்.

இந்த பெண் தெய்வத்தினை போற்றும் விழாவே உலகின் முதலாவது அன்னையர் தினமாக கொள்ளலாமாம். இந்த எகிப்து தெய்வமானது பின்னாளின் ரோமானியரின் சமயத்திலும், கிறிஸ்தவர்களின் புகானிஸிதத்திலும் கூட வணங்கப்படுபவளாக இருந்திருக்கிறதாம். இந்த எகிப்திய பெண் தெய்வமான ஐஸிஸ்"க்கான விழாவை ரோமானியர்களும் கொண்டாடினர். பின்னாளில் ரோமானியர்களின் பிரத்தியேக தெய்வமான ஸீஸஸ் (Zeus) உட்பட பல தெய்வங்களுக்கும் சிரேஷ்ட தாயாக வணங்கப்பட்ட ரெஹா (Rhea) என்ற பெண் தெய்வத்தை அன்னையர் தினமாக மூன்று நாள் கொண்டாட்டமாக கொண்டாடி வந்தார்களாம். இந்தக் கொண்டாட்டம் வருடத்தின் சம இரவு நாளில் தான் தொடங்குமாம்.

இதே போல் கிரேக்கத்தின் பல பெண் தெய்வங்களுக்கும், ஆசியாவின் பெண் தெய்வங்களுக்கும் இத்தகைய விழாக்கள் கொண்டாடப்பட்டு வந்திருக்கின்றன. நாகரீக முன்னேற்றமும், மனிதப்பரம்பலின் விரிவும் தெய்வ வழிபாடுகளிலிருந்த இந்த பெண் தெய்வங்களுக்கான கொண்டாட்டங்கள் வெவ்வேறு பரிமாணங்களில் உருவெடுத்திருக்கிறது என்றும் சொல்லலாம்.

பின்னாளில் பெண் தெய்வங்களை முன்னிறுத்தி கொண்டாடப்பட்ட அன்னையர் தினம் முதன் முதலாக மானுடத் தாய்மாருக்காக பரிமாணமெடுத்தது ஐரோப்பாவில் என்று தான் சொல்ல வேண்டும். ஈஸ்டர் பெருநாளுக்காக 40 நாட்கள் விரதமிருக்கும் கிறிஸ்தவர்கள் அந்த மாதத்தின் 4வது ஞாயிற்றுக் கிழமையில் தாம் ஞானஸ்தானம் பெற்ற தேவாலயம் (Mother Church) சென்று வழிபாடுகள் நடத்துவார்களாம். அந்த தேவாலயங்களில் தேவமாதாவுக்கு இவர்களின் பரிசுகளாக சமர்ப்பிக்கப்படும் நகைளும் மலர்களும் வேறு பல பரிசுப் பொருளும் லும் அந்நாட்களில் நிரம்பியிருக்குமாம்.

1600களில் தான் இந்த உண்மையான அன்னையர் தினத்தை தம்மைப் பெற்றவளுக்காக ஒதுக்கினார்களாம் ஐரோப்பியர். பிரித்தானிய அரசாங்கத்தின் வேலையாட்களுக்கு மே மாதத்தின் 4 வது ஞாயிற்றுக்கிழமையை தமது தாய்மாருடன் சென்று கழிக்க அனுமதி வழங்கப்படுமாம். தாயை சந்திக்கச் செல்லும் வேலையாட்கள் அவளுக்காக மலர்கள், இனிப்பு வகைகள், கேக் வகைகள், மற்றும் தத்தமது வசதிக்கேற்ப பரிசுப் பொருட்களுடன் போய் தத்தமது தாய்மாரை சந்திக்க செல்வது வழக்கமாக இருந்தது. இதை அப்போது மதரிங் சண்டே (Mothering Sunday) என்று அழைக்கப்பட்டதாம்.

அமெரிக்காவுக்கு இடம்பெயர்ந்த ஐரோப்பியர்கள் வாழ்வில் பிரிட்டி" நாட்டில் வழக்கபடுத்திக் கொண்ட மதரிங் சண்டே பாரம்பரியம் நாளடைவில் மறைந்து போய் சில நூற்றாண்டு காலத்தில் அது மறைந்தே போய்விட்டது எனலாம். அமெரிக்காவுக்கு இடம் பெயர்ந்த ஐரோப்பியரின் வாழ்வு மிகவும் நெருக்கடியும், நீண்ட நேர உழைப்புக்கு பலவந்தமாக உந்தப்பட்டவர்களாயுமிருந்ததாலும் அவர்களால் ஐரோப்பாவில் பின்பற்றிய பாரம்பரியங்களை தொடரமுடியாமல் போனதன் காரணம். முதன் முதலாக வட அமெரிக்காவில்



1870ஆம் ஆண்டில் ஜூலியா வார்ட் ஹோவ் (Julia Ward Howe) என்ற தாயார் “அன்னையர் தினத்தை” பற்றி பிரகடனம் செய்தார்.

*(தொடரும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்த வார ஆங்கிலப் பத்திரிகைகளின் மீதானபார்வை...

## The Sunday Times:

### செப்டம்பர் முதல் வாரத்தில் வடமாகாண சபைத் தேர்தல்

செப்டம்பர் முதல் வாரத்தில் வடமாகாண சபைத் தேர்தலை நடத்தும் பணிப்புரையை சனாதிபதி தேர்தல் ஆணையாளருக்கு விடுத்துள்ளார். அதற்கான திகதியை வெளிவிட விரும்பாத நம்பத்தகு வட்டாரங்கள் பொதுவாக தேர்தல்கள் சனிக்கிழமைகளில் நடைபெறுகின்றன என தெரிவித்துள்ளார். அரசு வடமாகாண சபைத் தேர்தலை நடத்தி முடிக்க முழு விருப்பத்துடன் இருப்பதாக ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரகூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் ஒன்றான இலங்கை சுதந்திர கட்சியின் தேசிய அமைப்பாளர் பசீல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

### மீன்பிடி தொடர்பாக ஐரோப்பிய ஒன்றியத்திற்கு உறுதியளித்துள்ள இலங்கை

சர்வதேச கடற்பரப்பில் சட்டவிரோத முறைகேடான மற்றும் வெளித்தெரியாத மீன்பிடியில் ஈடுபடும் நபர்களுக்கு தண்டனைகளை வழங்குவதை ஐக்கிய ஒன்றியத்திற்கு இலங்கை உறுதிப்படுத்தியுள்ளது. எனினும் இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழையும் இந்திய மீனவர்கள் தொடர்பாக எவ்வித விடயத்தையும் இலங்கை குறிப்பிடவில்லை. ஐக்கிய ஒன்றியத்திற்கு பயணத்தை மேற்கொண்டுள்ள மீன்பிடி வளத்துறை அமைச்சரின் தலைமையில் சென்ற குழு இவ் உறுதிமொழியை வழங்கியுள்ளமை தெரியவருகிறது. இம்மீன்பிடி தொடர்பாக தண்டமாக 15 லட்சம் ரூபாவை விதிப்பது அல்லது மீன்பிடிப் படகினைக் கைப்பற்றிக் கொள்வது ஆகிய இரண்டில் யாதாயினும் ஒன்று நிறைவேறும் என்பது தெரியவருகிறது. மேலும் கடல்வளங்களை பாதுகாப்போம் என்ற உறுதியையும் இக்குழு வழங்கியுள்ளது. சர்வதேச கடலில் மீன்பிடிப்பது தொடர்பாக இலங்கையினை ஏற்கனவே ஐக்கிய ஒன்றியம் மஞ்சள் நிற அட்டை எச்சரிக்கையைச் செய்திருந்தது.

### எழுத்து வாகனத் தகடுகள் விநியோகிக்கப்படவுள்ளன

எதிர்வரும் யூலை மாதம் மோட்டார்வாகனங்களுக்கு மூவெழுத்து வாகனத் தகடுகளை வழங்கவுள்ளதாக மோட்டார் போக்குவரத்து பதிவாளர் தெரிவித்துள்ளார். அத்துடன் தமக்கென பிரத்தியேக இலக்கங்களைப் பெற்றுக்கொள்வதற்கு 10 லட்சம் ரூபாவை மேலதிகக் கட்டணமாக பெற்றுக்கொள்ளும் படியான முன்மொழிவினை திணைக்களம் பெற்றுக்கொண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். கார்களுக்கான புதிய இலக்கத்திற்கு CAA - 0001 எனும் ஆரம்ப இலக்கத்துடன் வெளிவரவிருப்பதாக தெரிவித்துள்ள அவர் இவ்வாறே ஏனைய சொகுசு வாகனங்களுக்கான இலக்கத்தகடுகள் ஒரு சீரான எழுத்து இலக்க முறையில் விநியோகிக்கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். சுமார் 6.4 மில்லியன் வாகனங்கள் இப்புதிய இலக்கத்தகட்டு முறையில் பதிவு செய்யப்பட விருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார். பிரத்தியேக இலக்கத்திட்டத்தில் வாகன உரிமையாளர்கள் தமக்கு விருப்பமான வார்த்தை ஒன்றில் புதிய இலக்கமொன்றை பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

### சவூதியின் புதிய தொழிற் சட்டம் இலங்கையரைப் பாதிக்காது

சவூதி அரசினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புதிய தொழிற் சட்டமானது அங்கு பணியாற்றும் சுமார் நாநூற்று ஐம்பதாயிரம் இலங்கையர்களை பாதிக்காது.

இப் புதிய சட்டத்தினூடாக முக்கியமான தொழில்களுக்கு சவூதியினரேயே நியமிக்கும்படி அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது. எனினும் அம் முக்கிய தொழில்களில் இலங்கையர்கள் தற்போது சவூதியில் புரியும் தொழில்கள் உள்ளடக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

தற்போது பணியாற்றுபவர்களில் 50 வீதத்திற்கும் மேற்பட்டோர் வீட்டுப் பணிப்பெண்களாக உள்ளனர். எனினும் சட்டவிரோதமாக சவூதியில் பணியாற்றும் இலங்கையர்களை இச் சட்டம் தண்டனைக்குட்படுத்தும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## The Sunday Observer:

### சுதந்திரக் கட்சியுடன் ஈ.பி.டி.பி இணைந்து வடமாகாண சபையில் தேர்தல்

வடமாகாண சபைத்தேர்தல்கள் கலைகட்டிவரும் இக்காலத்தில் இலங்கை சுதந்திரக் கட்சி ஈ.பி.டி.பி உடன் இணைந்து இத்தேர்தலில் கலந்து கொள்ளும் என தெரிய வருகின்றது. இதற்கான முதற்கட்ட பேச்சுவார்த்தைகள் ஈ.பி.டி.பி உடன் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சரும் சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளருமான பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். இதே வேளை தமிழ்த்தேசிய கூட்டமைப்பும், ஐக்கிய தேசியக் கட்சியும் தனித்தே இப்போட்டியில் களமிறங்கப் போவதாக தெரியவருகிறது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தற்போதுள்ள தமது 5 பங்காளிக்கட்சிகளுடனும் இத்தேர்தல்களில் களமிறங்கவுள்ள அதே வேளை தேர்தல் திகதி அறிவிக்கப்பட்ட பின் மேலும் சில அரசியற் கட்சிகளை தம்முடன் இணைத்து செயற்படுத்த தாம் ஆர்வம் கொண்டிருப்பதாக தமிழ்த் தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார். ஆனால் ஐக்கிய தேசியக் கட்சியோ தட்டத்தனியாக இத்தேர்தலில் களமிறங்க விரும்புவதாகவே அதன் செய்திகள் தெரிவிக்கின்றன.

### மின்வலுத்தேவை வருடாந்தம் 8 வீதம் அதிகரிக்கிறது

நாடு எதிர்நோக்கியுள்ள மின்வலுப் பிரச்சனைகளுக்கான மூலகாரணம் இதற்கு முன் ஆட்சியிலிருந்த அரசுகளும் அதன் கொள்கை வகுப்பாளர்களும் என சுற்றுச் சூழல் மீள் உருவாக்க வலு அமைச்சர் சுசில் பிரேமஜயந் தெரிவித்துள்ளார். நுரைச்சோலை, மேல்கொத்மலை போன்ற எவ்வகைத் திட்டங்களும் 1995 தொடக்கம் 2007 வரை நிறைவேற்றப்படவில்லை. இப்பத்து வருட காலப்பகுதியில் மின்சக்தியைப் பெருக்கிக் கொள்வதற்கான எத்திட்டங்களும் மேற்கொள்ளப் படவில்லை. ஆனால் மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் சனாதிபதியாகியவுடன் மின்வலுவை பெருக்கிக் கொள்ளும் உறுதியான தீர்மானத்தை எடுத்திருந்தார். இதனால் நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையமூடாக 300 மெகா வோல்ட்டுக்களும் மேல் கொத்மலை மின் உற்பத்தி நிலையமூடாக 150 மெகா வோல்ட்டுக்களும் மேலும் 300 மெகா வோல்ட்டுக்கள் கரவெல்பிட்டிய ஊடாகவும் தேசிய மின்வலைப்பின்னலுக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். பயங்கரவாதத்தின் பின் ஒவ்வொரு ஆண்டும் 8வீதத்தால் மின்வலுத்தேவை அதிகரித்து வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

### மே 14இல் மதவாச்சிக்கும் மடுவுக்கும் இடையே தொடரூந்துச் சேவை

இந்திய உதவியின் கீழ் உருவாக்கப்பட்டு வரும் தலைமன்னார் ஊடான மடு - மதவாச்சி தொடரூந்துப் பாதைப் பணிகள் முடிவடையும் தருவாயில் இருப்பதால் இத்தடத்தில் தொடரூந்துச் சேவையினை மே 14இல் ஆரம்பிக்கமுடியுமென தொடரூந்து திணைக்கள பொது முகாமையாளர் தெரிவித்துள்ளார். அதற்கான கட்டளையை போக்குவரத்து அமைச்சர் தமக்கு வழங்கியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். இவ்விரு பிரதேசங்களிடையேயும் தற்போதைக்கு நாளாந்தம் 3 முறை மட்டுமே தொடரூந்துச் சேவை நடைபெறும் என தெரியவருகின்றது.

### H1, N1 உயிர்கொல்லி வைரஸ் தாக்குதல்களுக்கு உள்ளாகும் தாய்மையடைந்துள்ள பெண்கள்

461 தாய்மையடைந்துள்ள பெண்களின் இரத்த மாதிரிகளை பரிசோதித்த போது அவர்களில் 15பேர் உயிர்கொல்லி வைரஸான H1, N1 ஆல் தொற்றுக்கு இலக்காகியிருப்பது தெரியவந்துள்ளது. இவ்வறிவித்தல் வெளியான போது அவர்களுள் மூவர் மரணமாகிவிட்டனர் என சுகாதார அமைச்சின் பேச்சாளர் தெரிவித்துள்ளார். இவ் உயிர்கொல்லி வைரஸ் கர்ப்பமடைந்த பெண்கள், 60 வயதிற்கு மேற்பட்டவர்கள், 2 வயதிற்குட்பட்ட குழந்தைகள் மற்றும் ஏனைய மாற்றமுடியாத வியாதிக்கு உள்ளானவர்களுக்கு வேகமாக தொற்றிவிடும் வாய்ப்பு இருப்பதாக அவர் தெரிவித்தார். இத்தொற்று ஏற்பட்டால் 38 பாகை செல்சியசுக்கு மேல் காய்ச்சலும் கடுமையான இருமல், தடிம், தலையிடி, சுவாசப்பிரச்சனைகள் போன்றவை குணங்குறிகளாக தெரியவரும் என தெரிவித்தார்.

## The Leader

### அதிகாரப் பகிர்வுக்கு அழுத்தம் கொடுக்கும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள்

மாகாணங்களிடையே அதிகாரங்களைப் பகிர்வதற்கு மத்திய அரசிற்கு அழுத்தம் கொடுக்கும் முயற்சிககளை தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் மேற்கொண்டுள்ளது. கடந்தவாரம் கிழக்கில் நடந்த தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் மேதின கூட்டத்திலே இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக அக்குழுவின் பேசவல்ல அதிகாரி ஆஸாத் மௌலானா இவ்விடயத்தை தெரிவித்துள்ளார். அரசியலமைப்புச் சட்டத்தின் 13ம் திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுலாக்கும் படியும் அதனூடாக மாகாணங்களுக்கான அதிகாரங்களையும் பரவலாக்கும் படியும் தமது அணி அரசைக் கோரவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். வடக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் ஆதரவளித்துள்ளதாக தெரிவித்த அவர் அத்தேர்தலில் தாம் பங்குபற்றுவாரா இல்லையா என்பதை உரிய நேரத்தில் தீர்மானிப்பதாக அவர் தெரிவித்தார்.

### நிதியில்லாததால் நோர்வே அகதிகள் பேரவை நாட்டை விட்டு வெளியேறுகிறது

போதுமான நிதியினைப் பெற்றுக்கொள்ள முடியாதிருப்பதால் 2004ம் ஆண்டிலிருந்து இலங்கையில் தொண்டாற்றிய நோர்வே அகதிகள் பேரவை (N.R.C) எதிர்வரும் ஜூன் மாதத்துடன் இலங்கையில் தனது பணிகளை முடித்துக்கொண்டு வெளியேறவுள்ளது. இதன் பொருட்டு நோ.அ.பே யில் செயலாளர் நாயகம் டொறில் ப்றெக்கி இவ்வாரத்தில் இலங்கைக்கு வரவிருக்கின்றார். நிதிப் பற்றாக்குறையாலேயே இலங்கை அரசிற்கு தம்மாலான உதவிகளைச் செய்யமுடியாதிருப்பதாக தெரிவித்துள்ள நோ.அ.பே யின் அதிகாரி ஒருவர் தமது நடவடிக்கைகளை இவ்வருட ஜூன் மாதத்துடன் இலங்கையில் நிறைவு செய்யவிருப்பதாக தெரிவித்தார்.

### தொலைபேசிகள் அழைப்புகள் ஒட்டுக்கேட்கப்படமாட்டாது — அரசு

இலங்கையில் பாவிக்கப்படும் கைத்தொலைபேசிகளை தாம் ஒட்டுக் கேட்கப் போவதில்லை என இலங்கை அரசு தெரிவித்துள்ளது. அதனிலும் விசேடமாக பத்திரிகையாளர்களின் தொலைபேசிகளை ஒட்டுக்கேட்கவே மாட்டோம் என்று அரசு தெரிவித்துள்ளது. ஊடகத்துறை அமைச்சின் செயலாளரின் கூற்றினடிப்படையில் இலங்கையிடம் தொலைபேசிகளை ஒட்டுக்கேட்கும் எவ்வித சாதனங்களும் இல்லை என தெரியவருகின்றது.


### இடைக்கிடையே மட்டுமே எம்மிடையே வேறுபாடுகள் — அசோக் மு.கான்தா

இலங்கைக்கும் இந்தியாவிற்குமிடையே உறுதியான நீண்டகால உறவு இருப்பதாக இடையிடையே ஏற்படும் முரண்பாடுகளால் அவ்வுறவு தூர்ந்து போகப் போவதில்லை என்றும் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் அசோக் K.கான்தா தெரிவித்துள்ளார். ஜெனிவாவிலேயே இம்முரண்பாடுகள் உருவாகியிருப்பதாக தனது வேறுபதவிக்குச் செல்லும் இந்திய உயர்ஸ்தானிகர் தெரிவித்துள்ளார். இவ்வாறு முரண்பாடுகள் எழும் போது அவற்றைப் பிரித்து தனித்தனியே தீர்த்துக்கொள்ள முயற்சிக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். இவ்விரு நாட்டு மக்களிடையேயுமான உறவை மேலும் உறுதியாக்கவே இந்தியா விரும்புவதாக அவர் தெரிவித்தார்.

### கொகெய்ன் பயிரிடலுக்கெதிரான நடவடிக்கை

தென் மாகாணத்தில் வீட்டுத்தோட்டங்களில் பயிரிடப்பட்டுள்ள கொகெய்ன் செடிகளை அழித்தொழிக்கும் கட்டளைகளை அம் மாகாணசபை முதலமைச்சர் உரிய அதிகாரிகளுக்கு விடுத்துள்ளார். நாட்டு வைத்திய மூலிகை என்ற எண்ணத்துடன் வீட்டுத் தோட்டங்களில் அம்மாநிலத்தில் கொகெய்ன் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டு வருவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதன் விதைகளை மக்களுக்கு யார் வழங்கினார்கள் என்பது பற்றிய விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது. கொகெய்ன் செடிகளை வளர்ப்பது சட்டப்படியான குற்றம் என்பதை இப்பிரதேச மக்களுக்கு அறிவுறுத்தும் செயற்பாடும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சுமார் 370 கொகெய்ன் செடிகள் தென்மாகாணத்தில் மூன்று மாவட்டங்களிலும் வீட்டுத் தோட்டங்களில் பயிரிடப்பட்டு வருவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முரசின் விளையாட்டு செய்திகள்

## நடந்தேறின வலயமட்ட விளையாட்டுப் போட்டிகள்

திருகோணமலை வலய பாடசாலைகளுக்கிடையிலான வலய மட்ட விளையாட்டுப் போட்டிகள் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றன. திருகோணமலை கோணேஸ்வரா இந்துக் கல்லூரியின் மைதானத்தில் கபடி, உடற்பயிற்சி, கிரிக்கட், எல்லே, உதைப்பந்தாட்டம், கூடைப்பந்தாட்டம் ஆகிய போட்டிகள் நடைபெற்றதுடன் புனித மரியாள் கல்லூரியில் கராத்தே, பூப்பந்து, மேசைப்பந்து, கரம் மற்றும் சதுரங்கப் போட்டிகளும் ராஜகிரிய வித்தியாலயத்தில் ஆண் பெண்களுக்கான கரப்பந்து, எறிபந்து ஆகிய போட்டிகளும் நடந்தேறின.

## இலவசத் துடுப்பாட்டப் பயிற்சி முகாம்

துடுப்பாட்டப் பயிற்றுவிப்பாளர்கள் மற்றும் பாடசாலைகளின் பொறுப்பாசிரியர்களுக்கான இலவசத் துடுப்பாட்டப் பயிற்சி முகாம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மே மாதம் 11ஆம் 12ஆம் திகதிகளில் மட்டக்களப்பு இந்துக் கல்லூரி மைதானத்தில் ஸ்ரீ லங்கா கிரிக்கெட் நிறுவனத்தால் பயிற்சிகள் வழங்கப்பட உள்ளது.

ஆர்வம் உள்ளவர்கள் கலந்து கொள்ள முடியும். மேலதிக விபரங்களுக்கு ஸ்ரீகோணேஸ்வரா இந்துக் கல்லூரியின் விளையாட்டுப் பொறுப்பாசிரியர் திரு. சசிகுமார் அவர்களைத் தொடர்பு கொள்ளும்படி அவரது முகப்புத்தகம் வேண்டுகோள் விடுக்கின்றது.


தி/இ.கி.ச.ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி



இன்முக சேவையால் இதயமாய் உயர்ந்து நிற்கும்
இளைப்பாறிய அதிபர்
திரு. இரத்தினம் புவனேந்திரன்
அவர்களின் சேவை நலன் பாராட்டு விழா

காலம் :- 12.05.2013 நேரம் :- மாலை 4.30 மணி

அன்புடன் அழைக்கின்றோம்

ஏற்பாட்டு குழுவினர்


## திருகோணமலை மாவட்ட கிரிக்கட் சங்கம்

கடந்த வாரம் நடைபெற்ற திருமலை மாவட்டத் துடுப்பாட்டச் சங்கத்திற்கான நிர்வாகக் குழுத் தேர்வில் தலைவராக தியாகராஜா பிரபாதரன் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இத் தெரிவினைத் தொடர்ந்து 2013ஆம் வருடத்துக்கான துடுப்பாட்டச் சுற்றுப் போட்டிக்கான அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

மாவட்டக் விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்றும் இப் போட்டிக்கான விண்ணப்ப முடிவுத் திகதி 12.05.2013 ஆகும் என சங்கத்தினர் தெரிவித்தனர்.

போட்டிக்கான அனுமதிக் கட்டணம் ரூபாய் 3000.00 என மேலும் அவர்கள் தெரிவத்துள்ளனர்.

சுழற்சி (லீக்) முறையில் நடைபெறவுள்ள இப் போட்டிகளால் ஒரு போட்டியில் சோபிக்கத்தவறும் அணி அடுத்தடுத்த போட்டிகளில் தம்மைச் சுதாகரித்து ஆடக் கூடிதாக இருக்கும். விண்ணப்பிக்கும் கழகங்கள் நான்கு அணிகளாகப் பிரிக்கப்பட்டு போட்டிகள் நடைபெறவுள்ளதாக தெரிகின்றது.

## நினைந்தழுதல்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 22 | 05 |
| 09 | 05 |
| 1951 | 2013 |



### அமரர் திரு. மாணிக்கம் வேலாயுதபிள்ளை அவர்கள்

(நாமகள் சவுண்ட் உரிமையாளர்,
ஓய்வு பெற்ற திட்டமிடல் திணைக்கள அலுவலர்.)

மண்டூரைப் பிறப்பிடமாகவும் திருகோணமலை, மடத்தடியை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. மாணிக்கம் வேலாயுதபிள்ளை அவர்கள் 05.05.2013 அன்று இறையடி சேர்ந்தார். அன்னாரின் பிரிவாற் துயருரும் அவரது மனைவி திருமதி கலாதேவி அவர்களுக்கும் , கிருபனா(தாதி , பொதுவைத்தியசாலை திருமலை) தர்மிலன் (நாமகள் சவுண்ட்) டர்ஷனா (விஞ்ஞானபீடம், பேராதனைப் பல்கலைக்கழகம்) ஆகியோருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்கள்.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்வார் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"

நண்பர்கள்

## (மாயனின்..) ஒரு கொலையின் கதை ②



இலண்டனில் ஏற்கனவே மணமாகி ஒரு குழந்தைக்குத் தந்தையான அகிலவுடன் ஹம்சாவுக்குத் தொடர் பேற்பட்டதாகக் கருதப்படுகின்றது. அகிலவும் மாணவ அனுமதியுடன் ஐக்கிய இராச்சியத்தில் கல்வி கற்றுக் கொண்டிருந்தான் என்றே தெரிய வருகின்றது. அவனுக்கும் இலங்கையில் திருமணமாகி குழந்தையொன்றும் உள்ளது.

காதல் பெருக்கெடுத்தோடிய காலப்பகுதியில்தான் கேதீஸ் ஓர் முள்ளாக அகில விற்கும் ஹம்சாவிற்கும் தோன்றியிருக்க வேண்டும். அதன் பின்னர் கேதீஸைக் கொல்லும் திட்டம் உருவாக்கப் பட்டிருக்கின்றது.

இதற்கிடையில் நவம்பர் மாதம் 10ம் திகதி 2011ம் ஆண்டில் ஹம்சா இலங்கைக்குத் திரும்பி சில நாட்கள் கேதீஸ் உடன் சந்தோசமாக இருந்துள்ளாள். அதன் பின்னர் மீண்டும் இலண்டன் திரும்பிய அவளின் உடலெங்கும் சூட்டுக் காயங்கள் காணப்பட்டதாகவும், அவள் மனவிரக்தியடைந்திருந்த நிலையியே அங்கிருந்ததாகவும் நம்பகமற்ற தகவல்கள் தெரிவிக்கின்றன.


தான் இலங்கைப் படையினரால் பாலியல் ரீதியாகத் துன்புறுத்தப்பட்டதால் தான் இவ்வாறு காயங்கள் ஏற்பட்டதாக இலண்டனில் தெரிவித்த ஹம்சாவிற்கு நிரந்தர அனுமதி மார்ச் மாதம் 2012ல் கிடைத்துள்ளது எனவும் செய்திகள் தெரிவிக்கின்றன. இக்காலப் பகுதியில் தங்கிவாழ்வோன் அனுமதிக்கு விண்ணப்பித்திருந்த கேதீஸிற்கு அந்த அனுமதி மறுக்கப்பட்டிருந்தது.


ஹம்சாவிற்கு நிரந்தர அனுமதி கிடைத்தவுடன் அதற்கும் மேல் கேதீஸ் உயிருடன் இருந்தால் அவரைத்தான் முதன் முதலில் இலண்டனுக்கு அழைக்க வேண்டிய தேவை ஹம்சாவிற்கு ஏற்பட்டிருக்க வேண்டும்.

அதன் பின்னரே கொலைத் திட்டம் துரித கதியில் இயங்கியிருக்க வேண்டும்.

இத் திட்டத்துடன் இலங்கை வந்திறங்கிய அகிலவிற்குக் கொலைஞன் ஒருவனின் உதவி தேவையாய் இருந்தது. அதற்குத் தோதாகப் பட்டவன் தான் சிந்திக்க அதாவுட.

அடுத்த தேவை கொலைத் திட்டத்தை நிறைவேற்றத் தேவையான பணம். இங்கு தான் மிகப் பெரும் சோகம் நிகழ்ந்ததாக தெரிகின்றது. ஹம்சாவிடமிருந்து அழைத்த தொலைபேசியை பேசிய கேதீஸ் சிறிது நேரத்தின் பின் லண்டனில் உள்ள உறவினர் ஒருவருக்கு தொலைபேசி அழைப்பை மேற்கொண்டு சுமார் 2,000 ஐக்கிய இராச்சிய பவுண் பணத்தை தனது மனைவியடம் கொடுக்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.





இவ் வேண்டுகோளின்படி அத்தொகை ஹம்சாவிடம் கொடுக்கப்பட்டிருக்கின்றது.

அதனை அவர் பணப் பரிமாற்று முகவர் ஊடாக இலங்கைக்கு அனுப்பியுள்ளார். அப் பணப்பரிமாற்ற முகவருக்கு யாரிடம் செலுத்த வேண்டும் என்ற கட்டளையையும் 'அவர் வழங்கியுள்ளார். அந் நபர் ஒரு சிங்களப் பெண்மணி.

அப் பெண்மணி யார்?

அவர் அகில வின் தயார் என்றே நம்பகமற்ற தகவல்கள் தெரிவிக்கின்றன.

தனது கொலைக்குப் பணம் செலுத்திய ஒருவனாகத் தான் இருந்ததை கேதீஸ் என்றுமே அறிந்திருக்கவில்லை.



பணத்தைப் பெற்றுக்கொண்ட அகில சிந்திக்கவையம் தன்னுடன் துணைக் கழைத்துக் கொண்டு ஏப்ரல் மாதம் மூன்றாவது வாரத்தில், அதாவது ஏப்ரல் 13ம் திகதியளவில் திருகோணமலைக்கு வருகை தந்து சன்சைன் விடுதியில் அறையொன்றை வாடகைக்கு எடுத்துத் தங்கியுள்ளான். அடுத்த கட்டமாகக் கேதீஸின் நடமாட்டங்களை அவதானிக்கத் தொடங்கியிருந்தான்.

ஏப்ரல் 15ம் திகதி இரவு கொழும்புக்குத் தனிப்பட்ட தேவைகளுக்காக கேதீஸ் பயணமாகவேண்டிய தேவை ஏற்பட்டடிருந்தது.

அன்றைய இரவுப் பேருந்திற்குச் செல்வதற்காக பேருந்துத் தரிப்பிடத்திற்கு அருகிலுள்ள ஜயனார் கேணியிலுள்ள தனது மனைவியின் வீட்டிற்கு உந்துருளியிற் சென்ற கேதீஸ் தனது உந்துருளியை அவ் வீட்டில் விட்டுச்சென்றுள்ளார்.

கொலைஞர்களும் அவரைப் பின்தொடர்ந்திருக்கலாம் என்றே தெரிய வருகின்றது.

பின்னர் 18ம் திகதி அதிகாலையில் திருமலை திரும்பிய அவர் அனுராதபுரச் சந்தியில் பேருந்தை விட்டிறங்கி முச்சக்கர வண்டியொன்றை வாடகைக்கு எடுத்துக்கொண்டு தனது வீட்டிற்கு பயணமாகியுள்ளார்.

கொலை நடந்த நாளும் 18ம் திகதியே!

(தொடரும்)

மலைமுரசு பத்திரிகையின் உத்தியோகபூர்வ விநியோகத்தர்கள் – திருமலை நகர லியோ கழகத்தினர்
The official distributor of Malaimurasu is Leo club of Trincomalee Town

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப் பத்திரிகை, ஸ்ரீராம் பிரதர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் 11. 05. 2013 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.